தமிழரசு

16.7.1996 ரூ.3









# இந்த இதழில்


| | |
|---|---|
| **அரசு விழாக்களை எளிமையுடன் நடத்துக** | 2 |
| மகளிர் - சிறார் மனிதாபிமானத்திட்டம் | 4 |
| **காமராஜர் கருத்துக்கோவை** | 8 |
| அறிவியல் துளிகள் | 9 |
| **தலைமைப் பண்புபற்றி 'தாவோ' சிந்தனை** | 12 |
| நாரைகள் – சிறுகதை | 15 |
| **படமும் செய்தியும்** | 24 |
| எயிட்ஸ் என்னும் ஆட்கொல்லி நோய் | 26 |
| **சிரிக்கவும் சிந்திக்கவும் ஒரு சிறுகதை** | 32 |
| வாசகர் இதயம் | 34 |
| **பாரதி இல்லத்தில் நூலகம் – முதல்வர் ஆணை** | 35 |
| இரக்கம் - வாலியின் கவிதை | 36 |
| **செய்திச்சரம்** | 38 |
| ஊட்டச்சத்து வழங்கும் பயறு வகைகள் | 40 |
| **சுவைமிகு தகவல் பக்கம்** | 47 |
| ஆசிரியர் மடல் | 48 |



**தமிழரசு**


**திருவள்ளுவராண்டு - 2027**

**ஆடித் திங்கள் :1**

**மலர் : 27 இதழ் : 2**

**16.7.1996**

**விலை ரூ. 3**

# அரசு விழாக்களை எளிமையாக நடத்த வேண்டும்!

## முதல்வர் உத்தரவு

அரசு விழாக்களை நடத்தும்போது ஆடம்பரமாக செலவழித்தல், தேவையற்ற செலவுகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை முற்றிலுமாக தவிர்க்கும்படி மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களின் இந்த அறிவுரைப்படி அரசு விழாக்கள் நடத்த வேண்டிய முறை பற்றியும், கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் பற்றியும் அரசுத்துறைத் தலைவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் கீழ்க்கண்டவாறு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**ஒதுக்கிய தொகைக்கு மிகுதல் கூடாது**

- அரசு விழாக்கள் அவற்றிற்கு ஒதுக்கப்பட்ட தொகைக்கு மிகாமல் நடத்தப்பட வேண்டும்.

**ஆடம்பர அழைப்பிதழ் வேண்டாம்**

- அழைப்பிதழ்களை ஆடம்பரமாக அச்சிடக்கூடாது. அவற்றில் விழா குறித்த சித்திரங்களுக்கும் புகைப்படங்களுக்கும் முதலிடம் தரப்படவேண்டும்.

**அழைப்பிதழ் 'தமிழரசில்' அச்சிடுக**

- மாவட்டங்களில் நடைபெறும் மாநில அளவில் முக்கியத்துவம் வாய்ந்த விழாக்களுக்கு அழைப்பிதழ்களைச் செய்தித்துறை இயக்குநருடைய அனுமதி பெற்று 'தமிழரசு' அச்சகத்தில் அச்சிட்டுக் கொள்ள வேண்டும். மற்ற விழாக்களுக்கு அரசு கூறியுள்ள அறிவுரைகளின்படி எளிமையான முறையில் அழைப்பிதழ்களை அச்சிட்டுக் கொள்ளலாம்.

**ஆடம்பர உபகரணங்கள் அறவே வேண்டாம்**

- ஆடம்பரச் சுவரொட்டிகள், வண்ண விளக்கு அலங்காரம், கட்அவுட்கள், சுவர் விளம்பரங்கள் போன்றவற்றை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும்.

**சிக்கனமும் எளிமையுமாய் விழா மேடை**

- விழா மேடையை முடிந்த அளவுக்குச் சிக்கனமாகவும் எளிமையாகவும் அமைக்க வேண்டும். பிரம்மாண்டமான பந்தல்கள் அமைப்பது மேடையில் 'தர்பார்' நாற்காலிகள் போடுவது ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். தேவைப்படும்போது, நிழல் தருவதற்கு 'ஷாமியானா' போன்ற ஏற்பாடுகளை எளிமையான முறையில் செய்து கொள்ளலாம்.

### மலர்தூவி வரவேற்பு கூடவே கூடாது

- மலர் அலங்காரம் செய்வது, முக்கியபிரமுகர்கள் விருந்தினர்கள் வரும்போது மலர்தூவி வரவேற்பது போன்றவற்றை எக்காரணம் கொண்டும் செய்யக் கூடாது.

### விழாவின் தன்மையைக் காத்திடுக

- அரசு விழாக்களில் நிறையப்பேர் மேடையில் ஏறி மாலை அணிவிப்பது, சால்வை போர்த்துவதுபோன்றவற்றைச் செய்து அந்த விழாவின் தன்மையைப் போக்குவதைத் தவிர்க்க வேண்டும்.

### அரசு விழா - நிகழ்ச்சி வேறுபாடு தேவை

- விழாவிற்கும் நிகழ்ச்சிக்குமான வேறுபாடுகளைமுழுவதுமாகக் கடைபிடிக்க வேண்டும். அரசு நிகழ்ச்சிகளை விழாக்களைப் போல நடத்தக் கூடாது. மனு நீதித் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் (ஐ.ஆர்.டி.பி) விழிப்புணர்வு முகாம் போன்றவற்றை விழாக்களைப் போல நடத்துவது நிறுத்தப்பட வேண்டும்.

### வளைவுக்காக சாலை சேதப்படுத்தக்கூடாது

- அலங்கார வளைவுகள், தோரணங்கள், மின்விளக்கு வளைவுகள் போன்றவை இடம் பெறக் கூடாது. வளைவுகள் அமைப்பது என்ற பெயரில் சாலைகளில் குழிகளைத் தோண்டி சேதப்படுத்துவதற்கு அனுமதிக்கக் கூடாது.

### தனிநபர் நிறுவனம் அன்பளிப்பு பெறலாகாது

- தனிநபர்களிடமிருந்தும், தனியார் நிறுவனங்களிடமிருந்தும் விழாவிற்காக எந்தவொரு அன்பளிப்போ அல்லது பிற வகையில் உதவிகளோ பெறக் கூடாது. அது வேறு வகையில் அந்த நபர்களுக்குச்சலுகைகள் செய்வதற்கு வழிவகுத்துவிடும் என்பதால் அவற்றை முற்றிலுமாகத் தவிர்க்க வேண்டும்.

### செய்தித்தாள் பெரிய விளம்பரம் கூடாது

- விழாக்களுக்குச் செய்தித்தாள்களில் பெரிய விளம்பரங்கள் தருவது கூடாது.

மேற்கண்ட அறிவுரைகளை, அரசுத்துறை தலைவர்களும், மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அரசு நிறுவனங்களின் தலைவர்களும் தவறாமல்கடைப்பிடிக்க வேண்டும்.

### முதல்வர் படமோ அமைச்சர்கள் படமோ கண்டிப்பாக இடம்பெறக் கூடாது

மேற்கூறிய அறிவுரைகளுடன், அரசு நிகழ்ச்சிகள் குறித்து அச்சிடப்படும் எந்த ஒரு அழைப்பிதழிலும் முதல்வர் படம் மற்றும் அமைச்சர்கள் படம் இடம் பெறக் கூடாது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். தமிழக அரசின் சின்னம் இடம்பெற்றால் போதுமானது என்று அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

## மேடைப்பேச்சின் இலக்கணம்

### அறிஞர் அண்ணா கூறுகிறார்

"மாற்றான் வீட்டுத் தோட்டத்திலே பூத்திடும் மல்லிகைக்கு மணம் உண்டல்லவா? ரசிக்கத்தானே செய்வோம். அது போலவே, பேசுபவரின் கருத்து பயன்தருமாயின் கேட்பவரின் கூட்டுறவு எத்தன்மையதாக இருப்பினும், அவர்கள் ஏற்றுக் கொள்வர். எனவே, மேடைப் பேச்சுக்கு கருத்துக்களைச் சேகரிப்பது, சிந்தனையில் விளையும்படி செய்வது மிகமிக முக்கியம். பூத்த மலரை அழகுறத் தொடுத்தல்போல, கிடைத்தகருத்தைத் தொகுத்தும், வகுத்தும், பிரித்தும் சொல்லிட வேண்டும். வல்லும் சொல், தெளிவான நடை, நம்பிக்கையூட்டும் போக்கு இவைகளைக் கொண்டு பேச்சு அமைதல் வேண்டும்."



# மகளிர்-சிறார் நலம்காக்கும் மனிதாபிமானத்திட்டம்!

> **ஊரகப் பகுதிகளில் உள்ள பெண்களும், குழந்தைகளும் பயன்பெறும் வகையில், மாபெரும் மனிதாபிமானத் திட்டமாக அரசு வகுத்துச்செயல்படும் ஊரக மகளிர் மற்றும் சிறார் மேம்பாட்டுத்திட்டத்தை விளக்கி வரையப் பட்டுள்ள கட்டுரை இது.**

தமிழகத்தின் ஊரகப் பகுதிகளில் உள்ள மகளிர் மற்றும் சிறார் வாழ்வினை வளப்படுத்துகின்ற ஊரக மகளிர் மற்றும் சிறார் மேம்பாட்டுத் திட்டமானது *1983-84*-ஆம் ஆண்டில் சோதனை முறையில் ஒரு சில மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டது. பின்னர் இத்திட்டத்தின் பயன் வெகுவாக மக்களைச் சென்றடையும் நிலையறிந்து இன்று இம்மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது மகளிர், சமுதாயத்தில் உரிய மதிப்பும் மரியாதையும் பெற வாய்ப்பளிக்கிறது. மாபெரும் மனிதாபிமானத் திட்டமாகிய இத்திட்டத்தின் மூலம் பெண்களின் நிலையை மேம்படுத்துவதே அரசின் நோக்கமாகும்.

பெண்களை -

★ குடும்பத்தில் வருவாய் ஈட்டக்கூடிய ஒருவராக ஆக்குதல்;

★ ஆண்களுக்குச் சமமாகக் குடும்ப வாழ்க்கை நிலையினை உயர்த்த பங்கு கொள்ளுதல்;

★ குடும்பத்தை நல்ல நிலையில் இருக்கச் செய்தல்;

★ பொறுப்புள்ள தாயாராக இருக்கச் செய்தல் -

இவையே ஊரக மகளிர் மற்றும் சிறார் மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கமாகும்.

*10* முதல் *15* மகளிர் ஒரு குழுவாக அமைக்கப்பட்டு, எல்லோருக்கும் ஒருவருக்கொருவர் பயனளிக்கக் கூடிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பிரிவு அமைப்பாளர்
அந்தக் குழுவின்
தொடர்பு அலுவலராகப்
பணியாற்றுவார்.

ஒவ்வொரு குழுவிற்கும்
1994-95-ஆம் ஆண்டு வரை
கூடுதல் நிதியாக ரூ. 15,000
வழங்கப்பட்டது.
மத்திய அரசு ரூ. 5,000/-
மாநில அரசு ரூ. 5000/- மற்றும்
யூனிசெஃப் ரூ. 5000/-
தற்போது இச்சுழல் நிதி
ரூ. 25,000/- வரை உயர்த்தப்பட்டுள்ளது.
யூனிசெஃப் நிறுவனம்
தனது நிதி உதவியினை
31.12.1995 முடிய
நிறுத்திக் கொண்டுவிட்டபடியால்
இத்தொகையினை
மத்திய அரசும் மாநில அரசும் சமபங்காக
அளிக்கின்றன.

**... பலவகையான சுய வேலை வாய்ப்புப் பணிகளை ஏற்று, பொருள்களை உற்பத்தி செய்து அவற்றை விற்பனை செய்வதன் மூலம் மகளிர் தங்களது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பும் வசதியும் அரசால் அளிக்கப்படுகிறது...**

இத்திட்டத்தின் கீழ்
மகளிர் தையல் வேலை,
பாய் பின்னுதல்,
கூடை முடைதல்,
ஊதுபத்தி செய்தல்,
பாசிமணிமாலை,
பொம்மை, நாரினால்
ஆன பொருட்கள்
தயாரித்தல், ஊறுகாய்,
அப்பளம் தயாரித்தல்
உலர்ந்த மீன்கள் பக்குவம் செய்தல்,
பூச்செண்டுகள் தயாரித்தல்
போன்ற பலவிதமான
சுயவேலைவாய்ப்புப் பணிகளை ஏற்று
இவற்றை விற்பனை செய்வதன் மூலம்
தங்களது வருமானத்தைப் பெருக்கிக்
கொள்கின்றனர்.
தமிழ் நாட்டில்
1983-1984 முதல் 1995-1996 வரை
மத்திய அரசால் அனுமதிக்கப்பட்ட
மொத்த 7251 மகளிர் குழுக்களில்





ஒரு குழுவாக அமைந்து
இத்திட்டத்தைச்
செயல்படுத்த முடிவு எடுத்து
தையல் யூனியன் ஒன்று ஆரம்பித்து
அதனை 23.1.94 வ.எண். 13/94-ல்
கூட்டுறவு சட்டத்தின் கீழ் பதிவு
செய்யப்பட்டு
சேலையூர் ''யூகோ வங்கி'' யின் நிதி
உதவியுடன் செயல்படுத்தப்பட்டு
வருகிறது.
இக்குழுவில்
ஒவ்வொரு நபருக்கும் ரூ. 4000/-
மதிப்பில்
தையல் எந்திரங்கள் வழங்கவும்
உறுப்பினர்கள் அனைவரும்
பின்தங்கிய வகுப்பினைச்
சார்ந்தவர்களாதலால்
ஒவ்வொரு நபருக்கும் 1/3 பங்கு
நிதி உதவி
ரூ. 1333/- மீள் ஊரக வளர்ச்சி
முகமையின் மூலமும்
ரூ. 2667/- வங்கிக் கடனாகவும்
வழங்கப்பட்டது.
அருகாமையிலுள்ள ஓர் ஏற்றுமதி
நிறுவனத்திடமிருந்து
ஆடைகள் தைக்க ஆணைகள் பெற்று
உடைகள் தைத்துக் கொடுப்பதன் மூலமும்
அவர்கள் செய்யும் வேலைக்கு தக்க
ஊதியம் வழங்கப்படுவதன் மூலமும்
குழுவின் மாத வருமானம் ரூ. 15,000/-
வரை கிடைக்கப்பெறுகிறது.
இதில் 15 நபர்களும்
வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டிய
கடன் தவணையினை, செலுத்தியது போக

31.3.1996 முடிய 6562 குழுக்கள்
தமிழ் நாட்டிலுள்ள 22 மாவட்டங்களிலும்
அமைக்கப்பட்டு
1,06,425 மகளிர் பயனடைந்து
வருகிறார்கள்.
1996-1997 ஆம் ஆண்டிற்கு
ரூ. 200 இலட்சம் இத்திட்டத்திற்காக
ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இத்திட்டம்
நன்முறையில் செயல்படுவதற்கு
எடுத்துக்காட்டாக
செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம்
பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்திலுள்ள
மேடவாக்கம் கிராமத்தினை
எடுத்துக்கொள்ளலாம். இக்கிராமத்தில்
ஊரக மகளிர் சிறார் மேம்பாட்டுத்திட்டம்
1993-94 ஆம் ஆண்டு ஜுன் மாதம் முதல்
சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு
வருகிறது.
இக்கிராமத்தைச் சேர்ந்த
தையல் தொழில் தெரிந்த 15 பெண்கள்
சேர்ந்து

**... செங்கை எம்.ஜி.ஆர் மாவட்டம் பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தில் மேடவாக்கம்கிராமத்தில் 15 பெண்கள் தையல் தொழில் குழு அமைத்து சிறப்புடன் செயல்படுவதன் மூலம் குழுவின் மாதவருமானம் ரூபாய் 15,000 வரை கிடைக்கப்பெறுகிறது...**

தலா மாதம் ரூ. 900/- வரை
வருமானம் ஈட்டி வருகின்றனர்.

ஆடவரின் துணை ஏதுமின்றி
பெண்கள் தானாகவே
குழுவை நடத்தும் அளவுக்குத்
திறமையுடன் செயல்படுகின்றனர்.
மகளிர் மற்றும் சிறார்
மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்
சுழல் நிதியாக ரூ. 25,000/-ம்
கச்சாப்பொருள் வாங்கும் பொருட்டு
அளிக்கப்பட்டுள்ளது.
இதே போல்
செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்
மாவட்டத்தினைச்
சார்ந்த
காட்டாங்குளத்தூர்
ஊராட்சி
ஒன்றியத்திலுள்ள
காயராம்பேடு என்ற கிராமத்தில்
1993-94-ஆம் ஆண்டு ''எம்பராய்டரி
வேலை'' செய்யும்
16 மகளிர் அங்கத்தினரைக் கொண்ட
ஓர் குழு மிக நன்முறையில்
செயல்பட்டு வருகிறது.
விவசாயக் குடும்பத்தினைச் சார்ந்த
இப்பெண்கள்
விவசாயம் மூலம் வரும்
வருமானத்தினைத் தவிர
மாதம் ஒன்றுக்கு ரூ. 1200/-
முதல் ரூ. 1800/- வரை
இத்திட்டத்தினால் வருமானம்
பெற்று வருகின்றனர்.
இந்தத் திட்டம்
கிராம மகளிருக்கு
ஓர் உறுதுணையான திட்டமாகவும்
சுயநம்பிக்கை, தைரியம்,
சமுதாயத்தில் முன்னேற

**... செங்கை எம்.ஜி.ஆர். மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஊராட்சி ஒன்றியம் காயராம்பேடு கிராமத்தில் எம்பராய்டரி வேலை செய்யும் மகளிர் குழு நன்முறையில் செயல்பட்டு ஒவ்வொரு உறுப்பினரும் ரூபாய் 1,200 முதல் 1,800 வரை மாத வருமானம் பெறுகின்றனர்...**

வேண்டும் என்ற
நோக்கங்களை அளிக்கும்



திட்டமாகவும் அமைந்துள்ளது.
பெரியார், கோவை மாவட்டங்களில்
இத்திட்டம்
மிகவும் திறம்படச் செயல்பட்டு
வருகிறது. இச்சிறப்புமிகு திட்டம்
ஊரக மகளிர் மற்றும் குழந்தைகளுக்கு
நன்மை பயக்கும் நலமிக்க
மனிதாபிமான மாபெரும் திட்டம் ஆகும்!

## சமயச் சார்பற்ற சிந்தனை...

**சமயச் சார்பற்ற சிந்தனை, நீதி, கல்வி, உழைப்பு ஆகியவை நமக்கு புதிய வளமான உலகை அளிக்கிறது. பெரும்பாலான மக்கள் சமயச் சார்பற்ற சிந்தனைக்கு முக்கியத்துவம் அளிப்பதில்லை. ஆனால் மனிதர்கள் எவரும் நீதி, கல்வி, உழைப்பு ஆகியவற்றின்சிறப்பினைமறுப்பதில்லை. ஆனால் நீதி, கல்வி, உழைப்பு ஆகிய வற்றுக்கு நாம் இலக்கணம் வரையறுக்கும் பொழுதுதான் இன்னல்கள் எழுகின்றன.**

**– சிந்தனையாளர் இங்கர்சால்**




# காமராஜரின் கருத்துக் கோவை

பெண்கள் விழிப்பு அடைந்தால், குடும்பம் முன்னேறும்; கிராமங்கள் முன்னேறும்; தேசமே முன்னேறும்.

ஏழைகளை நல்ல முறையில் வாழவைத்து, எல்லோரும் ஒற்றுமையாக வாழ வேண்டும். அதுதான் சுதந்திரம், அதற்காகத்தான் சுதந்திரம் கேட்டார் மகாத்மா காந்தி.


சுதந்திரம் என்றால் பயமில்லாது வாழ்வதுதான். அப்படி பயமில்லாது வாழவேண்டும் என்றால் நாம் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும்.

நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதிலும், ஒற்றுமையோடு பாடுபடுவதிலும்தான் நமது முன்னேற்றம் இருக்கிறது.

நாடு முன்னேற வறுமையும் அறியாமையும் போக வேண்டும். இவை இரண்டும் போனாலன்றி, நாடு முன்னேறியதாகச் சொல்ல முடியாது.

யானை சாப்பிடும்போது ஒரு கவளம் சோறு கீழே சிந்தி விடுகிறது. யானைக்கு ஒரு கவளம்தான் நஷ்டம். ஆனால், அதுவே இலட்சக்கணக்கான எறும்புகளுக்கு ஆகாரமாகக் கிடைக்கிறதே! இதுபோல, அளவுக்கு மீறி சம்பாதிப்பதில் கொஞ்சம் வரி கொடுத்தால் பலபேர் பட்டினி தீர வழி செய்யலாமே!

# அறிவியல் துளிகள்




## டின் - உணவுகளுக்கு பெருத்த வரவேற்பு


'டின்' உணவுகளின் உபயோகம் 1990 ஆம் ஆண்டிலிருந்து அதிகமாகி வருகிறது. ஆண்டுக்கு 7.4 சதவிகிதம் அதிகரிக்கிறது. இவ்வகை உணவுத் தயாரிப்பில் பிரிட்டனைச் சேர்ந்த மார்க்ஸ் அண்ட் ஸ்பென்சர் போன்ற ஐந்து நிறுவனங்கள் பெரிதும் முன்னணியில் உள்ளன. ஓராண்டுக்கு பிரிட்டனில் 'டின்' உணவுப் பொருள் விற்பனை மூலம் அரசுக்கு வரும் ஆண்டு வருமானம் ஏறத்தாழ 32.3 கோடி பவுண்ட் ஆகும். நம் இந்திய நாட்டிலும் அவ்வாறான 'டின்' - 'பாக்கெட்' உணவுப் பொருட்களின் விற்பனையானது அண்மைக் காலமாக வளர்ந்து வருவதாக ஒரு கணக்கெடுப்புத் தெரிவிக்கிறது. ஆகவே, சென்ற மாதம் சென்னையில் அறிமுகப் படுத்தப்பட்ட ஆவின் மாம் பழச்சாற்றுக்கும் நல்ல வரவேற்பு இருக்கும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.



## இருட்டில் படம் பிடிக்கலாம்

பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சகத்தின் நிதியுதவியோடு, இருட்டில் படம் பிடிக்கும் புதியதோர் காமிரா கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. டாக்டர் ஸ்டீபன் போர்ட்டர் என்பவர் சுமார் 15 ஆண்டுக் காலம் படாதபாடுபட்டு இதை உருவாக்கியிருக்கிறார். 'முன்பே இது போன்ற காமிரா உண்டே?' - என்றுதானே முணுமுணுக்கிறீர்கள்? அவற்றுக்கும் இதற்கும் ஒரு முக்கிய வேறுபாடு உண்டு. அந்தக் காமிரா பாகங்களை மைனஸ் 200 டிகிரி செல்சியஸ் அளவுக்கான கடும் குளிர் நிலையில்தான் வைத்தாக வேண்டும். ஆனால் இது அப்படி யல்ல; சாதாரண வெப்ப நிலையில் வைத்திருந்தும் இதைப்

பயன்படுத்தலாமாம்; அமைப்பிலும்கூட அவற்றைவிட இது சிறியதாகவே இருக்கிறது.




## திரவ உரம்

சொட்டு நீர்ப்பாசனம் என்றால் உங்களுக்குத் தெரியும்; அதேபோலத் திரவமாக உரத்தயாரிப்பு இருப்பது தெரியுமா? இருக்கிறது அப்படி! திரவத்தைச் சின்னஞ்சிறு குழாய்மூலம் பயிருக்கு இடும்முறை மெல்லமெல்லப் பரவி வருகிறது. நம்நாட்டில் ஆந்திராவில் உள்ள நாகர்ஜுனா ஃபெர்டிலைசர் நிறுவனம் இவ்வகை உர உற்பத்திக்கென இஸ்ரேல் நிறுவனம் ஒன்றோடு கூட்டுச் சேர்ந்திருக்கிறது. முதலீடு ரூ. 3 கோடியாம்!

## சுற்றுலாத்துறையில் மின்னணுச் சாதனங்கள்

சுற்றுலாத்துறையில் மின்னணுச் சாதனங்களின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. இந்தியாவில் உள்ள சில தனியார் சுற்றுலா அமைப்புகள் சி.டி ராம்கள் தயாரிப்பது பற்றிக் கம்ப்யூட்டர் நிறுவனங்களோடு ஆர்வத்தோடு தொடர்பு கொண்டு வருகின்றன ‘காம்பேக்ட் டிஸ்க்’ எனப்படும் இந்த சி.டி.ராம்கள் மூலம் ‘இந்த சீசனில் எந்த ஊருக்குச் சுற்றுலா போகலாம்? பயணம் ரயிலிலா காரிலா விமானத்திலா எது நல்லது? அங்கே போய் எங்கே தங்கலாம்?’ என்பதையெல்லாம் முன்கூட்டியே தெளிவாகத் தெரிந்துகொண்டு சுற்றுலா புறப்படுவது வசதிதானே?




## விண்வெளியில் இந்திய செயற்கைக் கோள்

1957 ஆம் ஆண்டு அக்டோபர் 4-ஆம் தேதி ஸ்புட்னிக் -1 என்ற செயற்கைக் கோள், குறைந்த உயரத்தில், பூமியைச் சுற்றிவர விண்வெளியில் ஏவப்பட்டது. முதன்முதலில் ஏவியது சோவியத் ரஷ்யா. 1982 ஆம் ஆண்டு மே மாதம் தொலைத் தொடர்பு மற்றும் வானிலை சம்பந்தப்பட்ட இன்சாட் 1 ஏ என்ற செயற்கைக் கோளை இந்தியா விண்ணில் செலுத்தியது. எதிர்பாராத இயந்திரக் கோளாறு காரணமாக இந்தச் செயற்கைக் கோள் 5 ஆவது மாதத்தில் செயல்திறன் குன்றியது. இதன் பின் தேவையான திருத்தங்கள் செய்யப்பட்ட இன்சாட் 1 பி என்ற இரண்டாவது செயற்கைக் கோள் 1983 ஆம் ஆண்டு ஆகஸ்டு 30 ஆம் தேதி விண்ணில் செலுத்தப்பட்டது. இது 7 ஆண்டு காலம் திட்டமிட்டவாறு செயல்பட்டது. இதன் பணிக் காலம் முடியும் தருவாயில் இதற்கு மாற்றுக் கோளாக ஏவப்பட்ட இன்சாட் 1 சி என்ற மூன்றாவது செயற்கைக் கோள் சரிவர இயங்காததால் இது கைவிடப்பட்டது. இதன்பின் இன்சாட் 1 - டி என்ற நான்காவது தொலைத் தொடர்பு செயற்கைக்கோள் 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் விண்ணில் ஏவப்பட்டது. இது சிறப்பாகத் தற்போது செயல்பட்டு வருகிறது.




# அக்கரைக்கு இக்கரை.... ஆர்வத்தோடு திரும்புகிறார்கள்



தங்கள் படிப்பிற்கேற்ற வேலையோ வருமானமோ இந்தியாவில் கிடைப்பதில்லை என டாக்டர்கள், எஞ்சினீயர்கள் போன்றோர் படாதபாடுபட்டு வெளிநாட்டுக்குப் பறப்பதை நாம் அறிவோம். அவ்வாறு அயல் நாடுகளுக்குச் சென்றுள்ள டாக்டர்களின் எண்ணிக்கை மட்டும் சுமார் 60,000 என்கிறது ஒரு மதிப்பீடு. அப்படிச் சென்றிருக்கும் கற்றறிவாளர்களில் பலரும் இப்போது ஆர்வத்தோடு இந்தியாவிற்குத் திரும்பும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது! காரணம் என்ன தெரியுமோ? அந்த வெளிநாடுகளிலெல்லாம் கூட்டுத் திட்டத்தின் அடிப்படையில் இந்தியாவுடன் சேர்ந்து மருத்துவமனை, தொழில் நிறுவனங்கள் போன்றவற்றை அந்நாடுகளில் உள்ளதுபோன்ற வகையில் அமைத்துவருவதுதான்!

## சாஃப்ட்வேர் ஏற்றுமதி இந்திய சாதனை

இந்திய மின்னணுச் சாதனங்கள் சாஃப்ட்வேர் ஏற்றுமதி வளர்ச்சிக் கவுன்சில் கணக்கின் படி, இந்தியத் தொலைத் தொடர்புச் சாதனங்களின் ஏற்றுமதி கடந்த நிதியாண்டில் மிகுந்துள்ளது. உலக அளவில் தொலைத்தொடர்புச் சாதனங்களின் விற்பனை 51,000 கோடி டாலராக உயர்ந்திருக்கிறது. உலகச் சந்தையில் நம் இந்தியா உள்ளிட்ட 40க்கும் மேலான நாடுகள் 90 சதவிகித இடத்தைப் பிடித்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



## செயற்கைத் தோல்!

கோலஜன் என்ற ஒரு வகைப் புரத நாரின் முப்பரிமாணத் தையலால் உருவாக்கப்பட்ட செயற்கைத் தோல் கண்டு பிடிக்கப்பட்டு உள்ளது. ஏதேனும் விபத்தில் நம் உடம்புச்சதை பிய்ந்து போனால், தொடை போன்ற அங்கங்களிலிருந்து சதையை எடுத்துவைத்துப் பெரும் காயங்களைச் சரிசெய்வதை இனி செயற்கைத்தோல் முறை மூலம் தவிர்க்கலாம் என்கிறார்கள், அறிவியலறிஞர்கள்.

## கருத்தைக் கவரும் காதொலிக் கருவி

செவிகேளாதோருக்கு மிகவும் உதவும் வகையில் பிரஞ்சு நிறுவனம் ஒன்று அரியதோர் கருவியினைப் புதிதாகக் கண்டுபிடித்திருக்கிறது. 'இன்டிராசென்' என்ற பெயருடைய அந்த அற்புதமான காதொலிக் கருவிக்கு நல்ல வரவேற்பிருக்கிறது.

உலகெங்கும் மைக்ரோ புராசஸர் உதவியுடன் கம்ப்யூட்டரோடு இயக்கப் படுகிற இந்த மினியேச்சர் கருவியானது, மிக நுண்ணிய ஒலியையும் எளிதில் கிரகித்து விடும்; அதேபோல் பெரிய சப்தத்தையும் அளவோடு கேட்கச் செய்யும்.



'தாவோ' சிந்தனை

தலைவனுக்குரிய இலக்கணம்

வரையறுக்கிறது தாவோ

# தன்னலமின்மை



உண்மையான தன்னார்வமே
தன்னலமின்மையைக் கற்பிக்கிறது

வானகமும் வையகமும் வியாபித்திருப்பது
தம் சுயநலத்திற்காக அல்ல-
அனைத்துப் படைப்புகளுக்காக!


கூர்த்தமதியுடைத் தலைவன்
இவற்றையுணர்ந்து
தன்னலமுடைய செயல்களைக்
கட்டுப்படுத்தி
பொதுநலச் சிந்தையோடு சிறப்பாகச்
செயலாற்றுகிறான்!

அறிவார்ந்த தலைமை என்பது
தன்னலமற்றதே!

தன்னலத்தைவிட
மற்றவர்மீது அக்கறையுள்ள தலைவனே
மேலும் மேலும் வளர்கிறான்.
நீடித்து நிலைபெறுகிறான்.

புதுச்செய்தி


தன்னலமில்லாமல் நடப்பதன் மூலம்
தலைவன் தன்னை உயர்த்திக் கொள்கிறான்.



'தாவோ' சிந்தனை

தலைவனுக்குரிய இலக்கணம்

வரையறுக்கிறது தாவோ



# தண்ணீரும் தலைமையும்



**மதிநுட்பமுள்ள தலைவன்**
**தண்ணீருக்கொப்பானவன்.**

## தண்ணீர்


வெள்ளம்
படைப்புகள் யாவற்றையும்
எவ்வித பேத மின்றி
எவ்வித மதிப்பீடுமின்றி
கழுவித் தூய்மையாக்கி
புத்துணர்வூட்டுகிறது;

வெள்ளம்
இலகுவாக, அச்சமின்றி
மேட்டிலிருந்து பள்ளத்தை
நோக்கிப்பாய்கிறது!'

தண்ணீர் நெகிழ்வுடையது
பதிலீடு கொண்டது
நியதிகளை-சட்டங்களை
மதிக்கக் கூடியது.

## தலைவன்

எந்த இடத்திலும்
எச்சூழலிலும்,
எந்தப் பிரச்சினையிலும்
எவரது குற்றச்சாட்டுக்கும்
இடமின்றிச்செயலாற்றுகிறான்.



## 'தாவோ' சிந்தனை

## தலைவனுக்குரிய இலக்கணம்

### வரையறுக்கிறது தாவோ



வருமானத்தை மட்டும்
கணக்கில் கொள்ளாமல்
எல்லோரும் பயனடையும் வகையில்
திறம்பட ஆட்சிபுரிகிறான்.

சொல்லில்
எளிமையும்
வாய்மையும்
ஒற்றுமையும்,
இடையிடையே குறுக்கிட்டு
தெளிவும்
ததும்பிய பேச்சாற்றல்
கொண்டிருக்கிறான்.

வெள்ளத்தின் அசைவுகளில்
அதன் சக்தியைக்
கற்றுக் கொள்கிறான்.

எல்லாவற்றிற்கும்
காலமே அடிப்படை
என்பதை அறிகிறான்.

### தண்ணீரும் தலைமையும்

**தண்ணீரைப் போலவே**
**தலைவனும் எல்லோருக்கும்**
**நன்மை யளிக்கிறான்.**

அவன்...
யாரையும் தள்ளிவிடுவதுமில்லை.
எவரும் அவன்மேல்
எரிச்சலோ எதிர்ப்போ
கொள்வதுமில்லை.






அவர்களது அகன்ற பார்வையும், அமைதியும், பொறுமையின்மையும் இரைக்குக் காத்திருக்கும் நாரைகளை நினைவூட்டின.

பெட்ரோலிய மரத்தினால் உண்டாகும் நன்மைகள்:

'இனிமேல் அயல் நாட்டிலிருந்து பெட்ரோல் இறக்குமதி செய்ய வேண்டியது இல்லை. அதனால், அன்னியச் செலாவணி மிச்சமாகும். இயற்கையான பெட்ரோலியத்தைவிட எரிதிறன் கொண்டது இது. சுற்றுச் சூழல் கேடு குறைவாகவே இருக்கும்' - இப்படியெல்லாம் பெரிய வார்த்தைகளில் அவர்கள் விளக்கினார்கள். கூட்டத்திலிருந்த ஒரு சில படித்தவர்கள் கூட அதை விளங்கிக் கொள்ள முடியவில்லை. பெட்ரோலிய மரத்தினால் ஏற்படப்போகும் பொருளாதார நன்மைகளை ஒப்புக் கொள்வது மாதிரியாக இவர்கள் விளக்கியதும், சிறப்பு விருந்தாளியாக வந்தவர், தன் செயலரை அழைத்து அறிவித்தார் ''விளைநிலங்களில் பாதியை பெட்ரோலிய மரப் பண்ணைக்கு ஒதுக்குங்கள். இது நடைமுறைக்கு வர இன்றே ஒரு சட்டம் பிறப்பிக்க ஏற்பாடு செய்யுங்கள்''. அதற்கப்புறம் பெட்ரோலிய மரத்தின் அதிசயக் கதை அரசாங்க எல்லையை விட்டுத் தாண்டிப் போனது. தனியார் தொழில் முயற்சியாளர்கள் வேகமாய் செயலில் இறங்கினார்கள். பெட்ரோலியப் பண்ணை முயற்சியாளர்களது பல்வேறு செய்திகள் செய்தித்தாட்களில் தினசரி இடம் பெற்றன. இங்கு கொலை, அங்கு கொள்ளை, இங்கு இனக்கலவரம் என்ற தலைப்புச் செய்திகளால் இடம் பெறும் செய்திகள் இரண்டாவது இடத்திற்குப் போய் விட்டன.

பெட்ரோலிய ஆலையின் முயற்சியாளர்கள் மாநிலம் எங்கும் சுற்றிவந்து, பெட்ரோலிய மரப்பண்ணைக்குத் தோதான இடம் தேடினார்கள். அரசாங்கத்தின் அவசர உத்திரவுப்படிக்கு, போகுமிடமெல்லாம் அவர்களுக்குச் சிறப்பான விருந்து தரப்பட்டது. அரசு அதிகாரிகள், அப்பாவி மாணவர்கள், மக்கள் பிரதிநிதிகள், உள்ளூர் மேல் மக்கள், பத்திரிகைகள் யாவரும் பெட்ரோலிய மரம் தரும் பொருளாதார நன்மையைக் கேட்டு அதிசயித்தார்கள். சில பெட்ரோல் பங்குக்காரர்கள், பெட்ரோலிய முயற்சியாளர்களோடு முன் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். பெட்ரோலிய வியா

பாரிகள் என்று வந்தவர்களுக்கு வெளிநாட்டுக்காரர்கள் ராஜாக்களுக்குக்கூட உலகில் எப்புறத்திலும் அத்தகைய மரியாதைகள் கிடைத்ததில்லை. அவற்றால் மிகுந்த உற்சாகம் கொண்ட அவர்கள் பெட்ரோலிய வனப் பண்ணைக்கு ஏகபோக முதலாளிகள் ஆவதற்காக, அதிகாரம் உள்ளவர்களுக்குத் தாராளமாக முன்பணம் தந்தார்கள்.

அப்படியாக, அவர்கள் சோனாபட் என்னும் கிராமத்திற்கு வந்து சேர்ந்தார்கள். வளமான அந்த நிலத்தில் பொன் விளைந்தது. அதனால், அதற்கு அப்பெயர். அந்தக் கிராமத்தில் எவருமே படித்ததில்லை, ஒருவரைத்தவிர. அந்த ஆள் ஒரு பையன். படித்த பிறகு சமுதாயத்தில் ஒரு மரியாதை தேடும் பொருட்டாக கிறுத்துவனாக மதம் மாறி தூரத்து சர்ச் ஒன்றில் காவலனாக வேலை செய்கிறான். அந்தக் கிராமவாசிகள் கடவுள்களின், தீர்க்கதரிசிகளின் மொழியைப் பேசினார்கள். அவர்களுக்குப் பாடத் தெரியும். வானத்தைப் பார்த்து அடுத்த நாள் மழை வருமா என்று சரியாகச் சொல்வார்கள். திசாரி என்றால் கிராமப் பூசாரி என்று அர்த்தம். அவன் அந்தக் கலையில் வல்லவன். தனது கலையை இரண்டு சிஷ்யர்களுக்குப் பயிற்சியளித்துக் கொண்டிருக்கிறான். இப்போது ஒரு ஆண்டு முச்சூடும் கால வர்த்தமானம் எப்படியிருக்கும் என்று சரியாகச் சொல்லி வருவான் அவன். ஆமாம். பயிரிட முடியுமா? கிராமத்துப் பொருளாதாரம் என்னவாகும் என்று, நிலாவை, நட்சத்திரங்களைப் பார்த்து, பூச்சிகள், காட்டு விலங்குகளைக் கண்டு, காட்டுக் கொடி மலர்வதை வைத்து முன் அறிவிப்பான் அவன். கிராமத்துக்கு ஏதேனும் ஆபத்து வருமானால், முன்னோர் ஆவி கனவிலோ, விழித்திருக்கும் போதோ அவனது உடலில் வந்து புகுந்து கொள்ளும். அடையாளங்கள் மூலமோ வார்த்தைகள் மூலமோ அம்மக்களின், எதிர்காலத்தைச் சொல்லும்.

பெட்ரோலிய முயற்சியாளர்கள், சோனாபட்டுக்கு வந்து, ஊர்ப்புறத்தே கொட்டகை



**... திசாரி என்றால் கிராமப் பூசாரி என்று அர்த்தம். கிராமத்துக்கு ஏதேனும் ஆபத்து வருமானால், முன்னோர் ஆவி கனவிலோ, விழித்திருக்கும் போதோ அவனது உடலில் வந்து புகுந்து கொள்ளும்....**

போடத் தொடங்கியதும், ஏறத்தாழ ஒரு ஊமையனை சந்தித்தார்கள். ஊமை போன்ற அவன் ஒரு வட்டிக்காரனின் கொத்தடிமையாக நீண்ட காலமாக வேலை செய்து கொண்டிருந்தான். மலைச்சரிவில் ஒரு தன்னந்தனியான இடத்தை அவன் உழுது கொண்டிருந்தான். இரவில் பரண்மீது படுத்துக்கொண்டு வன விலங்குகளை விரட்டுவதற்குப் பறையடிப்பான். வேறு மனித ஜீவன்கள் அந்த நிலத்தின் பக்கம் போனதில்லை. அங்கு விலங்குகளும், கெட்ட ஆவிகளும் நிறைய இருந்தன. அவைகளோடு பேசுவது ஒரு போதும் நல்லதில்லை. நிலச் சொந்தக்காரன் ஒருமுறை அங்கு போனான் அறுவடைக்காக. அவனும் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. ஆதலால், அந்த மனிதன் பல ஆண்டுகாலமாக எவரிடத்திலும் பேசியது இல்லை. நாளடைவில் அவனுக்குப் பேச்சு மறந்து போயிற்று. வார்த்தைகளை உச்சரிக்க மறந்தான். ஒரு பொருளையோ, நிகழ்ச்சியையோ அவனால் விவரிக்க முடியவில்லை. அயல் நாட்டுக்காரர்களைப் பார்த்தவுடன் அந்த ஊமையன் கிராமத்தைப் பார்த்து 'கிராமத்து எல்லையில் ஒரு நாரைக்கூட்டம் விருந்து சாப்பிடுகிறது' என்று சொன்னான். மக்களை விட்டு விலகி வாழ்ந்த அவனுக்குப் பறவைகளும் விலங்குகளுமே நெருக்கமான தோழர்களாக இருந்தார்கள். அதனால்தான் அப்படி வருணித்தான். பெட்ரோலிய முயற்சியாளர்கள் சோனாபட் கிராமத்தை தங்கள் அலுவலகத் தலைமையிடமாகத் தேர்ந்தெடுத்தார்கள். காரணம் வளமான நிலம், அருமையான சீதோஷ்ணம், அப்புறம் அந்த மக்கள் எல்லாம் அறிவற்றவர்கள் என்பதுதான். சீதோஷ்ணம் குளுமையாக, இனிமையாக இருந்தது. அயல் நாட்டவர்களுக்கு, அவர்கள் சென்று வந்த மலை வாசஸ்தலங்களை நினைவூட்டி மகிழ்வித்தது. அவர்களது வியாபார புத்தி, சோனாபட் ஜனங்களின் அறியா

மையைப்பார்த்து, வேண்டிய நிலத்தை ஒரு பாட்டுக்கு வாங்கிவிடலாம் என்று கணக்குப் போட்டது.

இந்த அயல்நாட்டவர் யார்? கிறிஸ்துவப் பாதிரியார்களாக இருக்குமா? தொழிற்சாலை போன்று ஏதாவது அமைக்க வந்திருப்பார்களா? அல்லது கிராமம் மீண்டும் தண்ணீரில் மூழ்கிப் போகுமா? இல்லை, இல்லை. இது எந்த நன்மைக்காகவும் இல்லை. இந்த அறிகுறிகள் ஒருகாலும் நன்மை செய்ததே இல்லை. திசாரியை இப்படியான பயம் பிடித்துக் கொண்டது.

கிராமத்தவர்கள் எல்லோரும் அச்சப்பட்டார்கள். கிராமம் கிராமமாக இந்த அச்சம் பரவிற்று. திடீரென ஒருநாள், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், வனக்காவலர், கிராம ஊழியர், பள்ளி ஆசிரியர் என்று அரசாங்கத்தின் முக்கியமான சகல சக்தியும் வாய்ந்த அதிகாரிகள் வந்து, வந்திருக்கும் அயல்நாட்டுக்காரர்களுக்கு கிராம மக்கள் எல்லாவிதமான உதவிகளையும் தரவேண்டும் என்று மாற்ற முடியாத ஒரு உத்திரவை அறிவித்தார்கள். அயல் நாட்டவர்களது செயல் திட்டத்தை விளக்கும் பொருட்டு ஒரு கூட்டம் நடைபெறும் என்றும், மாலையில் அனைவரும் அதில் கலந்து கொள்ள வேண்டும் என்று வாய்மொழி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மாலையில் அந்த அந்நியர்கள், ஒலிபெருக்கி, பாட்டுப் பெட்டி, ஸ்லைடு, வீடியோ படம் இவற்றோடு வந்தார்கள். இயற்கையான பெட்ரோல் குறைந்து கொண்டே வருகிறது என்றும், மக்கள் அதனால் சிரமப்படுவார்கள் என்றும், பெட்ரோலிய மரப்பண்ணை நெல், சோளம், பருப்புப் பயிரைவிட இலாபகரமானது என்றும், பெட்ரோலிய மரங்கள் அந்நியச்செலாவணியை ஈட்டித் தரும் என்றும், இந்த அந்நியச் செலாவணியால் ஆடம்பர எலக்ட்ரானிக் சாதனங்களைப் பெருமளவு இறக்குமதி செய்ய முடியும் என்றும் அவர்கள் விளக்கினார்கள். குழப்பமாகவும், சுருக்கமாகவும் விளங்கிக் கொள்ள முடியாதவாறும், கற்பனைக்கெட்டாத மொழியிலும் அவர்கள் நிறையப் பேசினார்கள். பெட்ரோலிய மரத்தின் இலையொன்றை சினிமாத்திரையில் காட்டினார்கள். அதைப்பார்த்து பயப்பட்டுப்போன கிராமத்தவன் ஒருவன் 'அடே அம்மா, எவ்வளவு பெரிசு இந்த இலை, ஒரு இலையே பலாப்பழத்தின் அளவில் இருக்கிறதே!' என்று கத்தினான். 'இலையே பலாப் பழம் அளவு இருக்குமானால், இதன் பழம் ஒரு எருது அளவிற்கு இருக்கும்' என்று ஒரு கிழவன் கூடச் சொன்னான். சுற்றிலும் பலத்த சிரிப்பு. இதைத் தவிர, அக்கூட்டத்தில் வேறொன்றையும் அந்த மக்கள் புரிந்து கொள்ள முடியவில்லை.



கிராமத்தவர்கள், பாதையிலோ, சந்தையிலோ மோட்டார் வாகனங்களைப் பார்த்திருக்கிறார்கள் என்றாலும், அது பெட்ரோலில் ஓடுகிறதா? அல்லது சிரமப்பட்டு நிரப்பப் பெறும் காற்றினால் பறக்கிறதா என்று அவர்களால் நிச்சயப் படுத்திக்கொள்ள முடியவில்லை.

மகிழ்ச்சி நிறைந்த இந்த அறியாமை, அவர்களைக் காப்பாற்றுவதற்கு உதவவில்லை. தொழில் நுணுக்க நிபுணர்கள் தீட்டிய திட்டத்தின்படி, அயல் நாட்டவர்கள் ஒரு கம்பெனியை உருவாக்குவார்கள் என்றும்,

## பழங்குடியின மக்களின் சந்நிதிக்கு படிப்பவரை அழைத்துச் செல்லும் கதை

**"இன்றைய ஒரிய இலக்கியத்தின் வளமான பகுதி சிறுகதை. அந்த எழுத்து வெளியில் பிரகாசமான கோள் 'ரிசிகேஷ் பண்டா' என்று 'நாரைகள்' கதையின் ஆசிரியரை நமக்கு அறிமுகப்படுத்துகிறார், ஒரிய மொழியிலிருந்து இக்கதையை தமிழுக்கு ஆக்கித்தந்த கவிஞர் தமிழ்நாடன். இந்தச் சீர்மிகு படைப்பாளியைப் பற்றியும் அவரது படைப்பைப் பற்றியும் அவரது கருத்து இதோ:**

**"ரிசிகேஷ் பண்டா ஒரிய மொழியின் மிகச் சிறந்த படைப்பாளி. ஆற்றல்மிகு படிமச் சித்திரங்களும், பழங்குடியினர் நாட்டுப்புறத்தவர் கலைப்பண்புகளும் அவரது வெளிப்பாட்டுத் தனித்துவம். கிராமம், நகரம், பழங்குடியினர் வாழும் காடு என்று நம் மண்ணின் நிகழ்கால அவலங்களுக்கு பலமான ஒரு எதிர்க்குரல் பண்டாவின் குரல். படைப்பாளிகளின் படைப் பாளி என்று போற்றப்படும் இவர், தமிழ் படைப்பாளிகளுக்கு கலை நுணுக்கமும், படிப் பாளிகளுக்கு மனதைத் தொடும் அனுபவமும் தரக்கூடும்.**

**துயருறும் மக்களின் சோகங்களுக்குள் நுழைந்து அவர்கள் மீது மிகுந்த அக்கறையுடன் தன் இலக்கிய எதிர்க்குரலைப் பதிவு செய்து கொண்டிருப்பவர் பண்டா. பழங்குடியினரின் வாழ்க்கை எளிமையானது, உண்மையானது. கலப்படம் எதுவும் அற்றது. ஆனால், நவீன, முன்னேற்ற முயற்சிகள் அவர்களது வாழ்க் கையை எவ்வளவு பாழ்படுத்துகிறது; எப்படி, ஒரு பழங்குடி இனத்தையே முற்றாக இல்லாத வாறு ஆக்கிவிடுகிறது?**

**நவீன பொருளாதார முன்னேற்ற முயற்சி கள் இயற்கைவளத்தை மட்டுமல்ல; இயற்கை யின் மக்களான பழங்குடியினரையும் அழிக் கிறது. 'நாரைகள் கதையை நம்ப வேண்டும் என்றால் ஒருவர், ஒரு முறையேனும் பழங்குடி மக்களின் சந்நிதிக்குப் போய் வர வேண்டும்."**

அது, அரசாங்க நிலத்தில் பெட் ரோலியப் பண்ணையை அமைக்கும் என்றும் ஆயிற்று. மேலும், பக்கத்தில் உள்ளவர் கள் கூட தம் நிலத்தில் பெட் ரோலிய மரங்கள் நடலாம் என்றும் அதற்காக நாற்று, உரம், பூச்சிமருந்து, ஆலோசனை களை அந்தக் கம்பெனி மூலம், அரசாங்கம் அளிக்கும் என்றும் சொன்னார்கள். ஆனால், அந்த விவசாயிகள், பெட்ரோலிய மகசூலை அந்தக் கம்பெனிக்கு மட்டுமே விற்க வேண்டும். அதற்காக அவர்கள் முன்ன தாகவே, ஒரு ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும். அரசாங்கம் அதற்காக, அந்தக் கம்பெனிக்கு தேவைப்படும் மானியத்தை யும், உதவிகளையும் வழங்கும்.

எத்தனையோ ஆண்டு காலமாக, அந்த நிலங்களைக் கிராமத்தவர்கள்தான் உழுவார் கள். அவர்கள் உடைமையில் தான் நிலம் இருந்தது என் றாலும், அதற்கான சொந்தக் காரர்கள் என்ற உரிமைப் பத்திரம் அவர்களிடம் இல்லை. ஆதலால், நூற்றுக் கணக்கான விவசாயிகளின் நிலங்கள் அரசாங்க நிலம் என்று காட்டப் பட்டு, படிக்கப்புரியாத எழுத் துக்களும், கையொப்பங்களும், கைரேகைகளும் பதியப்பட்டு கம்பெனிக்கு ஒப்படைக் கப்பட்டன.

நிலவுடைமைக்குப் பத்திரம் வைத்திருந்த ஒரு சிலபேரும், தம் நிலத்தில், மனப்பூர்வமாக பெட்ரோலிய மரம் வளர்க்க ஒப்புக் கொள்வதாக ஒப்பந்தப் பத்திரம் எழுதிக் கொடுத் தார்கள். 'படிக்கக் கேட்டேன், சரி' என்று பெருக்கல் குறியீடு காட்டப்பட்ட இடத்தில், பல

பத்திரங்களில் கைரேகை வைத்துக் கொடுத்தார்கள்.

நிலங்கள் எடுத்துக்கொள்ளப்படும் என்றும், மீண்டும் ஒரு முறை கிராமம் வேர்களையப்படும் என்றும் செய்தி பரவியதும், குழப்பமும் நம்பிக்கை இழப்பும் கிராமத்தைச் சூழ்ந்தது. கிராம மக்களும், அவர்களது முன்னோர்களும், கடந்த முப்பதாண்டுக் காலமாக, திறன் அற்றுப்போயிருந்தார்கள். இடம் மாறுவதெனில், எங்கு நாம் போவது, வேறிடம், வீடெல்லாம் தானியம் நிறைந்திருக்கும்; பட்டினி என்பது எவருக்கும் தெரியாது'' என்று அவர்கள் முணுமுணுத்தார்கள். 'பருவ காலத்திலும், மழை இல்லாத போதும், பழம் பலா, மா, இனிப்புக்கிழங்கு, மகுவா, பனைநீர், தேன் எல்லாம் நிறைந்திருக்கும். வீட்டில் உண்ண எதுவும் இல்லாத போது காட்டில் நல்ல வேட்டை பொங்கும்'' எல்லாம் போயிற்று. இப்போது இரண்டு மாதமாகப் பட்டினி, கூட்டிலிருந்து வெளிவந்து 'நான் கண்டு சொல்வேன்!' என்று அவன் அறிவித்தான். இரவில் நட்சத்திரங்களோடும், பகலில் சூரியனோடும், காற்றில், மலையில், தோட்டத்தில், வானத்தில், பூமியில், சொர்க்கத்தில், பாதாள உலகத்தில் உள்ள எண்ணற்ற கடவுள்களோடும் பேசினான். அவனுக்குக் கொஞ்சம் நம்பிக்கை தென்பட்டது. காரணம், அவன் முகம் சூரியன் போலப் பிரகாசித்தது. தொடர்ந்து அவன்,



ஒண்டுவதற்கு வேறு ஒரு இடம் கிடைக்காது. எல்லா நிலங்களையும், பேப்பர் மில்களும், முந்திரித் தோட்டங்களும், புதிய சரணாலயங்களும் ஆக்கிரமித்துக் கொண்டன. ''வன தேவதையின் கையை யாரோ முறித்து விட்டார்கள் போலிருக்கிறது. இப்போது, அக்கடவுள், உண்ணுவதற்கு ஒரு தண்டு. ஒரு கிழங்கு எதையும் அருள்வதில்லை. அப்போதெல்லாம் கானகம் வறண்டு போனது. கானகக் கடவுளோடு விளையாடுவது போல சிலபேர் சில மரங்களை அங்கொன்று இங்கொன்று நட்டார்கள். அதன் வேர்கள், இலைகள், பழங்களில் யாருக்கும் ஒரு உபயோகமும் இல்லை. கிராமம் இப்போது எங்கு இடம் மாறும் என்று அங்கலாய்த்தது அவர்கள் மனம்.

திசாரியைச் சுற்றி மக்கள் கூடினார்கள். விசித்திரமான ஒரு அயல்நாட்டுக்காரர்களின் முகாமிற்குப் போய்ச் சேர்ந்தான். அயல்நாட்டுக்காரர்களைப் பார்த்து தடுமாற்றம் எதுவும் இல்லாத வார்த்தைகளில் சொன்னான் திசாரி. 'நீங்கள் நல்லவர்கள் அல்ல. கெட்ட ஆவிகள் என்று எனக்குத் தெரியும். கொடிய மனத்தினர் நீங்கள், உயிர் கேட்கும் பூதங்களைப் போல வந்திருக்கிறீர்கள். குபேரக் கடவுளின் செல்வங்

களையெல்லாம் அடையும் வரை நீங்கள் ஓயமாட்டீர்கள். அளவற்ற செல்வக் களஞ்சியத்தை நான் உங்களுக்கு காட்டினால் இந்த கிராமத்தை விட்டு வெளியேறுவீர்களா?

இந்த நிலத்தில் ஒரு விரற்கடை அளவும் தொடமாட்டோம் என்று சத்தியம் செய்து தருவீர்களா? உங்களுக்கு இதயம் இருந்தால், அந்த இதயத்தில் நல்லெண்ணம் எதுவும் இருந்தால், அதன் பேரில், சத்தியம் செய்யுங்கள். உங்களுக்கு ஏதேனும் கடவுள் இருந்தால், அதன் பேரில் சத்தியம் செய்யுங்கள். இந்தக் காவல் தெய்வத்திடமிருந்து, உங்களால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு செல்வமும் எடுத்துக் கொள்ளுங்கள். நாங்கள் ஒரு வார்த்தையும் கேட்க மாட்டோம். எங்களுக்கு இந்தச் செல்வம் வேண்டாம். எங்களை இந்த இடத்திலிருந்து துரத்தி விடாதீர்கள். எங்கள் தலைக்கு மேல் இருக்கிற ஒரே கூரையைப் பறித்துக் கொள்ளாதீர்கள்.''

'அப்படியே' என்று சத்தியம் செய்து கொடுத்த அயல் நாட்டவர்கள் விஞ்ஞானி, வியாபாரி, பொருளாதார நிபுணன், நிலவியல் ஆய்வாளன், ஆலோசகன், அரசியல்வாதி, சுரண்டுகிறவன், நிலங்களைப் பறித்துக் கொண்டவன், எல்லோரும் திசாரியைப் பின்தொடர்ந்தார்கள். குடுமி, காற்றில் பறக்கும் முடி, கையில் ஒரு காப்பு, காதில் பெரிய வளையம், ஒரு மூக்குத்தி, இவற்றோடு தலைக்குள் ஏராளமான சிந்தனைகளோடு விளங்கினான் திசாரி.

கிராமத்தைத் தாண்டி, அடர்ந்த கானகத்திற்கு வந்தார்கள். அச்சமூட்டும் சிகரங்களும், வானத்திலிருந்து தொங்குவது போல உருண்டையான பாறைகளும் திடீரென எதிர்ப்பட்டன. புல் அற்ற, வழுக்குச் சிகரம் ஒன்றின் உச்சி மீது ஒரு குரங்கு போலத் தொற்றி ஏறிய திசாரி, அங்கிருந்து ஒரு கயிற்றை எடுத்துக் கீழே வீசினான். அந்தக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு, விஞ்ஞானி, அரசியல்வாதி, பொரு



**... அயல்நாட்டுக்காரர்களைப் பார்த்து தடுமாற்றம் எதுவும் இல்லாத வார்த்தைகளில் சொன்னான் திசாரி: 'நீங்கள் நல்லவர்கள் அல்ல. கெட்ட ஆவிகள் என்று எனக்குத் தெரியும். கொடிய மனத்தினர் நீங்கள் !...**

ளாதார நிபுணன், சுரண்டுகிறவன், நிலம் பறிப்பவன் எல்லோரும் மேலே ஏறினார்கள்.

'மகா கடவுள்களே! ஆடாமல் நில்லுங்கள். இந்தப் பிளவு வழியாகக் கீழே பாருங்கள். இந்தப் பள்ளத்திற்குக் கீழே தான் குபேரக் கடவுள் வசிக்கிறார். மகா கடவுள்களே! ஐயா கீழே பாருங்கள், ஜாக்கிரதை, உங்களுக்குத் தலை சுற்றக் கூடும். இன்னும் கொஞ்சம் கீழே உற்றுப் பாருங்கள். கவனமாகப் பாருங்கள். இருட்டு மறைந்து எல்லாம் தெரியும்' என்று, அந்தக் கனவான்களைப் பார்த்து மனதிடத்தோடு சொன்னான் திசாரி.

எல்லோரது முகத்திலும் சிரிப்பு வெடித்தது. தன்னை இழந்து ஒவ்வொருவரும் உரக்கச் சிரித்தார்கள். 'ஹா-ஹா-ஹா' இது என்ன என்று உனக்குத் தெரியுமா? இது ஒரு பெட்ரோலியக் கிணறு!' ஆர்வம் மேலிட கூர்ந்து, ஒரு அணிலைப் போல முகர்ந்து பார்த்தார் விஞ்ஞானி. நிலவியல் ஆய்வாளர், மாதிரியை ஆராய்பவர் போல துண்டாக மடித்தார். பொருளாதார மேதை உடனே கணக்கிட்டு, 'இந்தப் பெட்ரோலிய இருப்பின் மதிப்பு எவ்வளவு தெரியுமா? பத்தாயிரம் ஏக்கர் பெட்ரோலிய மரப்பண்ணையிலிருந்து நூறு வருஷத்திற்கு கிடைக்கும் பெட்ரோலுக்குச் சமம் இது.'

'வா, வா' திசாரி ஐயா, நீங்கள் உண்மையில் அதிபுத்திசாலிதான். உங்களுக்குப் பெரும் பரிசளிப்போம். நாங்கள் - வாஹ்! வாஹ்! இதைக்காட்டியதால் ஒரு சிறப்பான காரியம் செய்தாய்! உனது வேண்டுகோளை நிச்சயம் நிறைவேற்றுவோம்.'

கொஞ்சநேரம் கூப்பிய கரங்களோடு திசாரி நின்றான். பிறகு எல்லோரும் கிராமத்திலிருந்த முகாமுக்குத் திரும்பினார்கள். அவர்களுக்குப் பின்னே, ''தெய்வங்களே! எங்களைக்

கொன்று விடாதீர்கள்; இந்த எண்ணெய்க் கிணற்றிலிருந்து உங்களுக்கு வேண்டும் அளவு எடுத்துக் கொள்ளுங்கள். எங்கள் ராகி வயல்களை, நெல் சோள வயல்களை, எங்கள் ஓடைகளை, ஆறுகளை, எங்கள் கடவுள்கள் எங்கள் தாத்தாக் களின், முன்னோர்களின் ஆவி களை அலைக்கழிக்காதீர்கள். உங்கள் பேனாநுனி கூட தங்கம் விளைவிக்கும். இந்த மலட்டு நிலத்தின் மீது உங்களுக்கு ஏன் ஆசை? இந்த வானத்திலும், காற்றிலும், எண்ணற்ற ஆவிகள் குடிகொண்டு, ஒரு குடையைப் போல எங்களைக் காக்கின்றன. அவர்களை வதைக்காதீர்கள் அவர்களைத் துரத்தாதீர்கள்'' என்று குவித்த கரங்களோடு கெஞ்சியவாறு வந்து கொண் டிருந்தான் திசாரி.

அந்தக் கடவுள்கள் அருள் புரிந்தார்கள். 'திசாரி சார், உங்கள் வேண்டுகோளைக் கேட்போம். கூடிய விரைவில், எமது தீர்ப்புரைப்போம்.'

அயல் நாட்டவர்கள், தமது முகாமில் உணர்ச்சி வயப்பட்ட வர்களாய் இருந்தார்கள். மது, ஆட்டம், விருந்து என்று களி யாட்டம் தொடர்ந்தது.

பணம், பணம், நிலம், பங்கு மார்க்கெட், வங்கி யிருப்பு, அயல்நாட்டுப் பெண் கள், இப்படியான கனவுகளில் நீந்தினார்கள். 'கனவு கண்டது போதும், நிஜத்துக்கு வாருங்கள்' என்றார் ஒருவர். ரொம்ப நேரக் கனவு நல்லதில்லை. அதுவும் கனவு காணும் பழக்கம் இல்லாதவர்களுக்கு – என்றார் ஒருவர். 'பெட்ரோலியக் கிணற்றிலிருந்து பெட்ரோல் எடுப்பது எவ்வளவு சுகமாக இருக்கும். பயிரிடவென்று வெய்யிலிலும் மழையிலும் அவதிப்பட வேண்டியதிருக் காது' என்றார் ஒருவர். ஆலோச கருக்கு வருத்தமாகிப் போனது. அவரது விரிவான பெட்ரோலிய மரப்பண்ணைத் திட்டம் பயனற்றுப் போயிற்று. திட்டம் தயாரித்ததற்காக, கம்பெனி தரவிருந்த பங்குத்தொகை அவருக்குக் கிடைக்காது. 'பெட்ரோலியச் சுரங்கத்தை அரசாங்கம் எடுத்துக்கொள் ளும். இதில் நமக்கு என்ன



**... ரத்தம் உறிஞ்சும் அட்டை போன்ற நிலத்தை கையகப்படுத்து கிறவன், ரொம்ப நல்லது, நிஜ மாகவே அருமையானது, வேலை செய்ய அங்கு நிறையப் பெண்கள் இருப்பார்கள் என்று தன் திருப் திக்கு அவன் சிந்தித்தான்...**

லாபம்? என்றார் அவர். தலைமை வணிக முயற்சியாளர் சொன்னார். 'நாம் மென் மேலும் பணக்காரர் ஆகலாம். ஆனால் பெட்ரோலிய மரப் பண்ணைத் திட்டம் இல்லாமல் இந்தப் பெரிய பூமிக்கு நாம் சொந்தக்காரர்கள் ஆவது எப்படி? இது அவர்கள் எல் லோரையும்கவலைக்குள்ளாக் கிற்று. பெட்ரோலிய மரத்தைக் கண்டுபிடித்த விஞ்ஞானி சொன்னார்: உண்மைதான். அரசாங்கம், பெட்ரோலியக் கிணற்றை எடுத்துக்கொண் டால், நமக்கு நிலம் கிடைக் காது. கவலைப்படாதீர்கள். நாம் பெட்ரோலியக் கிணற் றைப் பயன்படுத்திக் கொள் வோம். அதை வெளியே தெரி விக்காமல், பெட்ரோலிய மரத் தின் விளைச்சல்தான் இது என் போம். சுரண்டுகிறவன் அருமை நிலம் நம் கையை விட்டுப் போகாது என்று உடனடியாக அங்கீகரித்தான். ரத்தம் உறிஞ்சும் அட்டை போன்ற நிலத்தைக் கையகப்படுத்து கிறவன், ரொம்ப நல்லது, நிஜ மாகவே அருமையானது, வேலை செய்ய அங்கு நிறையப் பெண்கள் இருப்பார்கள் என்று தன்திருப்திக்கு அவன் சிந்தித் தான். அவ்வாறானால், திட்டச் செலவு பாதியாகக் குறையும், லாபம் ஒன்னரை மடங்கு அதிகமாகும் என்றார் பொருளா தார நிபுணர். திட்டத்தில் அதிகப்பங்குகள் வைத்திருந்த அரசியல்வாதி பெரிய உறு மலில் வெடிச்சிரிப்பு சிரித் தான். அது மலைக்காற்று போல வும், பள்ளத்தாக்கில் பாய்ந்து வரும் மழை வெள்ளம் போல வும், இலையுதிர் கால இரவின் நிலா வெளிச்சம் போலவும் இருந்தது. எல்லோரும் சிரித் தார்கள். அவர்களது காட்டுச் சிரிப்பு வெறியாக மாறிற்று. நெருப்பைச்சுற்றி, குளிரில் இளம் பெண்கள் ஆடிக்கொண் டிருந்தார்கள். அயல் நாட்டவர் ரத்தத்தில் வெப்பம் பாய்ந்தது. அந்தக் குழுவில், யாரோ ஒருவன், வெளியே ஒரு கோழி குந்தியிருக்கிறது என்றான்.

கால்கள் கட்டப்பட்டு பட படத்துக் கொண்டிருக்கும் கோழி.

'காமவெறி கொண்ட ஒருத்தி என் வயிற்றுக்குள் உருள்வதுபோல ரொம்ப பசிக்கிறது' என்றான் ஒருவன். 'முட்டாளே, வெளியே கோழி




ஒன்றும் இல்லை. அந்த திசாரிப் பயல்தான் நிற்கிறான்' என்றான் இன்னொருவன், 'அவனை வைத்துக்கொண்டு என்ன செய்வது? அவனிடம் ஒரு வாக்குறுதி வேறு செய்து கொடுத்துள்ளோம்' என்று கூவினான் ஒருவன், 'வாருங்கள், அவனைக் கொன்று போடலாம். அப்புறம் வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் இருக்காது என்றான் இன்னொருவன். 'ஆ! அருமையான யோசனை' என்று எல்லோரும் குதூகலித்தார்கள். இந்தக் குபேரக் கடவுள்களின் செல்வம் பற்றி, ஏதேனும் போட்டிக் கம்பெனிக்கு திசாரி சொல்லிவிட்டால்? என்று அச்சப்பட்டான் ஒருவன். 'எவ்வளவு பெரிய முட்டாள் இந்த திசாரி! பெட்ரோலியக் கிணற்றைக் கடவுளின் சொத்து என்கிறானே' என்று விமரிசித்தவாறு விலா நோகச் சிரித்தான் ஒருவன். ''எவ்வளவு மென்மை, நளினம், ஆசையூட்டும் பார்வை, ஒரு கோழிக் குஞ்சைப் போல இந்த திசாரி'' என்றான்இன்னொருவன். 'ஆ! கவிஞன் நீ! நல்ல கவிதை சொன்னாய்' என்று மற்றவர்கள் அப்படிச் சொன்னவனைப் புகழ்ந்தார்கள்!

திசாரி, இந்தக் கடவுள்களின் உத்தரவுக்காக, வெளியே காத்திருந்தான். அவன் மனம் உயர்ந்தது. பெருமிதப்பட்டுக் கொண்டான். நூற்றைம்பது கடவுள்களுக்கும், இருநூறு பெண் தெய்வங்களுக்கும் மனசுக்குள் பூஜை செய்தான். இந்தக் கடவுள்கள் சைகை காட்டி அவனை அழைத்தார்கள். மீண்டும் ஒருமுறை அவனது வேண்டுகோளை வைக்கும் சந்தர்ப்பம் அவனுக்குக் கிடைத்தது. கைகுவித்தவாறு, அவர்கள் காலடியில் தலை சாய்ந்தது. அவர்களது காலடித் தூசு அள்ள முயன்று பூட்சுகளின் அழுக்கை எடுத்தான்.

மீண்டும் அவன் இறைஞ்சினான். ''கடவுள்களே! உங்கள் தாவும் குதிரைகள் எங்கள் ராகி வயல்களை அழித்துவிடாதிருக்கச் செய்யுங்கள். ராகி சிந்திப்போகும், எங்கள் ஆடைகளை அழுக்கால் நிரப்பாதீர்கள். எண்ணற்ற ஓடைகள், ஆலைகளின் கழிவு நீரைத்தான் இப்போது சுமந்து வருகின்றன. அல்லது வறண்டு கிடக்கின்றன. பனைமரம் ஒவ்வொன்றும், வாழ்க்கை ஓடைபோல, அதன் பால் தாய்ப்பால்போல, எங்கள் மூதாதையர் கடவுளைத் துரத்திவிடாதீர்கள். எங்கள் சேமத்திற்கும், துன்பத்திற்கும் அவர் அருளே காரணம். பெரிய ஆத்மாக்கள் இருக்கும் சொர்க்கத்திற்குப் போக வேண்டும் என்றுகூட அவர் ஆசைப்படடதில்லை. எண்ணற்ற ஆவிகள் தனியே துணையற்று, அநாதிகாலம் முதல் இந்த கானகத்து இருளில் வழக்கத்தின் காரணமாக இங்கும் அங்கும் அலைந்து கொண்டிருந்தன. எல்லாக் கடவுள்களும் முப்பத்து முக்கோடி தேவர்களும் துரத்தப்பட்டால் வீடற்று, கையகல இடம் இல்லாமல் ஆக்கப்பட்டு விடுவார்கள்.''

பெட்ரோலியப் பண்ணை முயற்சியாளர்களுக்கு இவையெல்லாம் காதில் விழவில்லை. கோடிக்கணக்கான ரூபாய்கள், அளவற்றகளியாட்டம், கட்டுப்பாடில்லாத அதிகாரம் இவைதான் அவர்கள் கண்முன் நின்றது. ஆனால் கவலை தோய்ந்து கண்ணீர் வடிப்பதுபோல அவர்கள் முகம் தெரிந்தது. அவர்கள் திசாரியை நோக்கி விரைந்

தார்கள். வணங்கிய கரங்களுடன் விண்ணப்பித்துக் கொண்டிருந்தான் திசாரி. அந்தக் கிராமம், நிலப்பரப்பு, அவனது இன மக்கள் எல்லாம் திசாரியின் பொறுப்புதான். கும்பிட்ட கைகளுடன் நடுங்கியவாறு நின்று கொண்டிருந்தான் திசாரி.

அழுக்கான, களைப் படைந்த திசாரியைத் தேற்றும் பொருட்டு, அன்னியர்கள் அருகில் நெருங்கினார்கள். இந்த நொடி முதல் வயலில் இருந்த நெருப்பு அணைந்து விடும். இந்த ஆட்டம் பாட்டம் ஒரு முடிவுக்குவரும், இருள் வந்து சூழும், இந்தக் கிராமம் துடைத்து எரியப்படும் என்று திசாரிக்குத் தெரியும். இருந்தாலும் தன்னால் முடிந்ததைச் செய்து முடித்த் திருப்தியோடு, கடவுள் விதித்தபடி கீழ்ப்படிந்து நடப்பவனாக, உண்மையான நம்பிக்கையோடு, ஊமையனைப்போல நின்றிருந்தான் அவன். முடிவு அவன்கையில் இல்லை. முடிவு இப்படி இருக்க வேண்டும் என்று அவன் எதிர்பார்க்கவும் முடியாது. தங்கள் குழந்தைகளின் சேமத்தையும், துக்கத்தையும் கவனித்துக்கொள்கிற கடவுள், மூதாதையர்கள் அதையெல்லாம் கவனித்துக் கொள்வார்கள்.

விஷப்பாம்பு போல, அன்னியர்களின் கரங்கள் நீண்டு, திசாரியைச் சுற்றிக் கொண்டு, அவனது கால்கள் தொடை, குறி, கைகள், கழுத்து, காது, மூக்கு, இதயம் இவற்றை நொறுக்கின. திசாரியின் கழுத்து திருகிக் கொண்டது, தலைமுடி அவிழ்ந்தது. கடைவாயோரம் ரத்தம் ஒழுகிற்று. பற்களுக் கிடைய அகப்பட்ட கோழி எலும்பு போல அவன் எலும்பு நொறுங்கிற்று. காவு கொடுக்கப் பட்ட கோழிக்குஞ்சு போல அவன் உடம்பு அசையாமல் கிடந்தது. வெறிக்களியாட்டம், இறந்து கிடக்கும் திசாரியின் உடலைச் சுற்றித்தொடர்ந்து. அவனது ஆவி அநாதையாக, சூன்யத்தில் மறைந்து போயிற்று. கைவிடப்பட்ட அந்த ஆத்மா, தன் இனத்திற்காகத் தியாகம் செய்தது என்றாலும், அவர்களது குறை தீரவில்லை.



**... விஷப்பாம்பு போல, அன்னியர்களின் கரங்கள் நீண்டு, திசாரியைச் சுற்றிக் கொண்டு, அவனது கால்கள் தொடை, குறி, கைகள், கழுத்து, காது, மூக்கு, இதயம் இவற்றை நொறுக்கின. திசாரியின் கழுத்து திருகிக் கொண்டது...**

திருப்தியுறாத திசாரியின் ஆவி தன் இனமக்களைக் காப்பாற்றுவதற்காக வானத்தில் வெப்ப அலைகளோடு பறந்து திரிந்தது. ஆனால், அது அவ்வளவும் வியர்த்தம்.

சோனாபட் துறுதுறுப்பாக இயங்குகிறது. இப்போது அது ஒரு கிராமம் இல்லை. நகரம், பொருளாதார முன்னேற்றத்திற்கு முன்மாதிரியாகத் திகழும் புரட்சிகரமான மாறுதலுக்கு உதாரணமான, நாகரீகமான, நவீன நகரம் சோனாபட், பெயரற்ற இந்த பாலைவனத்தில் சுதந்திரம் எப்படி ஆட்சி புரிகின்றதென்று வந்து பாருங்கள்! மோட்டார் கார், மாளிகைகள், மின்சாரம், குழாய்த் தண்ணீர், சாக்கடை வசதி, இப்படி எவ்வளவு நாகரீகமாயிருக்கிறது இந்த இடம்! கம்பெனியின் குடியிருப்புக் காலனியில் அழகாக அலங்கரிக்கப்பட்ட வீடுகள் - அங்கே படித்த மக்களின் கூட்டம். பணத்திற்காக எப்போதும்முண்டியடித்துக்கொண்டு பறக்கும் பணக்கார நாரைகளின் இந்த நாட்டில், இந்த நாகரீகம் எவ்வளவு உயர்வானது எவ்வளவு சிறப்பானது!.

***(ஒரிய மொழிச் சிறுகதைகளின் தொகுப்பான 'ஏழு கார்ட்டூன்களும் ஒரு வண்ண ஓவியமும்' நூலிலிருந்து. ஆசிரியர் : ரிஷிகேஷ் பண்டா. மொழியாக்கம்: கவிஞர் தமிழ்நாடன் புத்தக வெளியீடு: சேலம் மாவட்ட சமகால ஓவியர் மற்றும் எழுத்தாளர்கள் சங்கம், 192, மேட்டுத்தெரு, தடாலடிப் பட்டி, சேலம் - 636 006)***

## எவரும் திருட முடியாத பொக்கிஷம்

திருடர்கள் திருட முடியாத பொக்கிஷம் ஒன்று உண்டு. அறிவாளி நற்காரியங்களைச் செய்வானாக. அதுதான் ஒருவனைப்பின்பற்றிவரும் பொக்கிஷம். அழகிய முகம், இனிய குரல், நளினம், தேஜஸ், பெருமை, சந்தர்ப்பம் - இவற்றையெல்லாம் இந்தப் பொக்கிஷத்தினால் பெற்று விட முடியும்.

– பகவான் புத்தர்.

# படமும் செய்தியும்

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் முன்னிலையில் மத்திய இரயில்வேத்துறை அமைச்சர் திரு ராம்விலாஸ் பாஸ்வான் தமிழ்நாட்டில் இரயில்வே வசதிகள் குறித்து அலுவலர்களுடன் தலைமைச் செயலகத்தில் ஆலோசனை செய்தார்.





தமிழரசு முதல் இலவச வெளியீடான காய்கறித் தோட்டம் முதல் பிரதியை முதல்வர் கலைஞர் அவர்கள் பெறுகிறார். அருகில் வேளாண்மைத்துறை அமைச்சர் திரு வீரபாண்டி ஆறுமுகம், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு அ. ரகுமான்கான், செய்தித்துறை அமைச்சர் திரு வ. முல்லைவேந்தன் உள்ளார்கள்









முதல்வர் அவர்களை அவர்தம் இல்லத்தில், அமெரிக் தூதர் திரு ஃபிராங்க் ஜி. வைஸ்னர் சந்தித்து உரையாடினா (1.7.96)

ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு சமயநல்லூ எஸ். செல்வராஜ் மறைந்த தலைவர் பாபு ஜெகஜீவன்ர திருவுருவச் சிலைக்கு மாலையணிவித்தார். (6.7.96)





முதல்வர் அவர்களை அவர்தம் அலுவலகத்தில் மத்திய விமானப் போக்குவரத்து மற்றும் தகவல் ஒலிபரப்பு இணையமைச்சர் திரு சி.எம். இப்ராஹிம் சந்தித்தார் (2.7.96)





+2 மற்றும் பள்ளி இறுதி வகுப்புகளில் மாநிலத்தில் முதல் மூன்று நிலைகளில் தேர்வுற்ற மாணவ, மாணவிகளுக்கு அவர்தம் மேற்படிப்பிற்காக ஆகும் முழுச் செலவையும் அரசு ஏற்றுக்கொள்ளும் எனும் ஆணையை முதல்வர் வழங்கினார் (2.7.96)

# எய்ட்ஸ் என்னும் ஆட்கொல்லி நோய்



எயிட்ஸ் என்பது நோய்களின் ஒரு கூட்டுத் தொகுப்பு. இந்த நோயால் இன்று உலக மெங்கும் மரணத்தின் தொகை அதிகரிக்கப் படுகிறது. இந்த நோய் தாக்காத மனித வர்க்கமே இல்லை. இந்தியாவில் ஆயிரக்கணக்கான மக்கள் எயிட்ஸினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

எயிட்ஸ்க்கென்று தனிப்பட்ட முறையில் உடலில் அறிகுறிகள் தென்படுவதில்லை.

உடலின் தற்காப்புச் சக்தியை அதாவது எந்த நோய்க்காரணங்களாவது உங்களுக்குள் புகும் போது அதை எதிர்த்து தள்ளுவதற்கான சக்திகள் நம் உடலில் உள்ளன. அந்த எதிர்ப்புச் சக்தியை எயிட்ஸ் அழித்து விடுகிறது.

**உலகமே இன்று அஞ்சி நடுநடுங்கும் எயிட்ஸ் நோய் பற்றிய கட்டுரை இது. எயிட்ஸ் நோய்க்கு மருந்து கிடையாது. ஆனால், இந்நோய் நம்மை பற்றாமல் தடுக்க முடியும். அந்த வழிவகைகளைப்பற்றியும் எயிட்ஸ் நோய் பற்றிய மற்ற விவரங்களையும் தெளிவாக எடுத்துச் சொல்கிறது இக்கட்டுரை.**

## பாதுகாப்பற்ற வீட்டில் திருடன் நுழையத்தானே செய்வான்!

பாதுகாப்பற்ற வீட்டில் திருடர்கள் புகுந்து விடுவதுபோல் பல நோய்கள் நம் உடலில் தாக்குதலை ஆரம்பிக்கின்றன.

இந்த நோய்க்கிருமி மனிதனது கவனக் குறைவாலும், அவன் ஒழுக்கமற்ற வாழ்க்கை வாழ்வதாலும்தான் பரவுகிறது.

இந்த நோய் ஆண், பெண், குழந்தை என்று யாரையும் தாக்க வல்லது.

நோய் ஏற்பட்டுவிட்டால்
இன்று
அதற்கு சிகிச்சை கிடையாது என்பதை மக்கள் நன்றாகப்புரிந்து கொள்ள வேண்டும்.

''நோய் வந்து விடாமல் தடுக்க வேண்டும்'' என்பதுதான் மக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

நோய்வரும் முறைகள், நோயின் தாக்குதல் வராமல் தடுக்கும் வழிகள் ஆகிய அனைத்தும் இக்கட்டுரையில் கொடுக்கப்பட்டுள்ளது.

எயிட்ஸ் என்ற சொல் எதை விளக்குகிறது?

## ஆங்கிலச் சொற்களின் முதல் எழுத்து குறுக்கம்

எயிட்ஸ் என்ற சொல் நான்கு ஆங்கில சொற்களின் முதல் எழுத்துக்களின் சேர்க்கை.

ACQUIRED – A – ஒரு மனிதனிடமிருந்து மற்றொருவர் பெற்றுக்கொள்வது
IMMUNE – I – உடலின் எதிர்ப்புச் சக்தி
DEFECIENCY – D – குறைந்து விடுதல்
SYNDROME – S – பல நோய்களின் கூட்டுத் தொகுப்பு

**எந்தக் கிருமி**
**இந்த நோய்க்குக் காரணம்**

HIV என்பது அந்த அதி நுண்ணுயிரின் (VIRUS) பெயர். அதாவது

HUMAN – H – மனிதனது

IMMUNO – I – எதிர்ப்புச் சக்தியைக் குறைக்கும்

VIRUS – V – அதி நுண்ணுயிரி

- இந்தக் கிருமியே எயிட்ஸ்நோய்க்குக் காரணமாகும்.

ஒரு மனிதனது உடலுக்குள் இது புகுந்து விட்டால் அவனது பாதுகாப்பு சக்தி முழுவதும் சிறிது சிறிதாக அழிந்துவிடுகிறது.

உடலைப் பாதுகாக்கும் பணி இரத்தத்தில் உள்ள வெள்ளணுக்களுக்கு ஒதுக்கப் பட்டிருக்கிறது.

நோய்க்கிருமிகள் உடலுக்குள் புகுந்தால் இந்த வெள்ளணுக்கள் இரண்டு முறைகளால் தன் எதிர்ப்பைத் தெரிவித்துச் செயல்பட்டு, அந்தக் கிருமியினைக் கொல்கின்றது.

1. தானே முன்னின்று கிருமியை ஆக்ரமித்து அழிக்கின்றது (இதுதான் சிறந்த பணி)

2. வீரியமான சில திரவங்களைச் சுரந்து அதன் மூலம் கிருமிகளை அழிக்கின்றது.

**வெள்ளை அணுக்களைத்**
**தாக்கி அழிக்கிறது எச்ஐவி**

எயிட்ஸ் வைரஸ் உடலினுள் புகுந்தவுடன் நேரடியாக இந்த வெள்ளை அணுக்களைத் தாக்கி அவற்றைச் செயலற்றுப் போகச் செய்த பின்னர் அழித்தும் விடுகின்றன.

இந்த அழிக்கும் பணி பல மாதங்கள், ஏன் பல ஆண்டுகளாகக் கூட உடலுக்குள் நடந்து கொண்டிருக்கும். ஆனால் இது நமக்குத் தெரியாது. உடலிலும் இது நடந்து கொண்டிருப்பதற்கான அறிகுறிகளும் வெளித் தோன்றாது. ஆனால், அழிவு வேலை ஓரளவு வெற்றிகரமாக முடிந்தவுடன் கிருமி உள்ளே புகுந்து பெருகிவிட்ட பிறகு மனிதனின் உடல் எந்தச் சின்ன நோய் கூட தாக்கும் அளவிற்கு வலுவிழக்கிறது. தாக்கிய நோயை எதிர்த்துப் போராட அவன் உடலின் ''பாதுகாப்புத்துறை'' அழிக்கப்பட்டுவிட்டதால் அவனை இப்போது

- ▲ காச நோய்
- ▲ புற்று நோய்
- ▲ மூளைக் காய்ச்சல்
- ▲ கட்டுப்படாத வயிற்றுப்போக்கு

என்று எந்த நோயும் தாக்கி உட்புகுந்து வளர்ந்து சில மாதங்களிலோ, சில நாட்களிலோ அவனை அழித்துவிடும்.


**தனிப்படுத்தி சொல்லுமளவு அறிகுறிகள்**
**எயிட்ஸ் நோய்க்கு ஏதும் இல்லை**

மஞ்சட்காமாலை என்றால் கண்களிலே மஞ்சள் நிறம் தெரியும். காசநோய் என்றால் ஓயாமல் இருமல் இருக்கும். டைபாய்டு என்றால் தொடர்ந்து காய்ச்சல் அடிக்கும். மலேரியா ஜுரம் என்றால் குளிர்க் காய்ச்சலும் நடுக்கமும் இருக்கும் என்பதைப்போல,


எயிட்ஸ் என்ற நோய்க்கு தனிப்படுத்திச் சொல்லுகின்ற அளவுக்கு அறிகுறிகள் கிடையாது.

**எயிட்ஸ் நோய் தாக்கியதைப்**
**பின் எப்படித்தான் தெரிந்து கொள்வது?**

பதுங்கிப் பதுங்கி ஒருவன் வருகிறான் என்றால் ஒன்று திருட அல்லது ஒளிவதற்கு வருவான் என்று நாமாகப் புரிந்து கொள்வதைப்போல கீழ்க்கண்ட சில நோய் அறிகுறிகள் ஏற்படும் போது, இரத்தத்தில் கிருமி நுழைந்ததற்கான அடையாளம் தெரிகிறது என்று பரிசோதித்துப் பார்த்துக் கொள்ளலாம்.



பல நாட்களுக்குத் தொடர்ந்து காய்ச்சல், பல நாட்களுக்குத் தொடர்ந்து வயிற்றுப் போக்கு, தொடர்ந்து வரும் களைப்பு, மயக்கம், திடீரென்று எடைகுறைதல், குறையாத இருமல், வாய்ப்புண், நிணநீர் கழலைகளின்




உருப்பெருக்கு மேற்கூறிய நோய் வெளிப்பாடுகள் சிகிச்சைக்குக் கட்டுப்பட வில்லையென்றால் கிருமிக்கான இரத்தப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும்.

**எயிட்ஸ் நோய்க்கிருமி பரவும் வகை அறிந்துகொள்வீர்**

1. உடலுறவின் மூலம்

2. சுத்தம் செய்யப்படாத ஊசிகளின் மூலம்

3. சோதனை செய்யப்படாத ஹெச்.ஐ.வி. கிருமியுள்ள இரத்தம் ஏற்றுதல் மூலம்

4. இக்கிருமி தாக்கப்பட்டுள்ள தாய் மூலம் குழந்தைக்கு

**பாதுகாப்பற்ற உடல் உறவால் பல்கிப்பெருகுகிறது எயிட்ஸ் நோய்**

எயிட்ஸ் நோய்க்கிருமி வைரஸ், உடலில் இரத்தம். ஆண்விந்து, நீர் பெண் உறுப்பு திரவம் ஆகிய இடங்களில்தான் வாழ்கின்றது. எனவே, உடலுறவின் போது ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு (ஆணிடமிருந்து பெண்ணுக்கோ அல்லது பெண்ணிடமிருந்து ஆணுக்கோ) பரவுகிறது.

ஒரு ஆண் பலருடன் உறவு கொள்ளும் போது இந்தக் கிருமி அவன் உடலுக்குள் புகுவதற்கு வாய்ப்பு அதிகமாகிறது.

நம் முன்னோர்கள் கூறிய அறிவுரையாகிய ''ஒருவனுக்கு ஒருத்தி'' என்பதை நாம் கடைப்பிடிப்பது நல்லது.

ஒரு பாலர் உடலுறவு கொள்வது என்ற முறையிலும் எயிட்ஸ் கிருமி பரவுதற்கு வாய்ப்புள்ளது.

**எயிட்ஸ் நோய் வராமல் தடுக்க வழிமுறைகள் என்னென்ன?**

திருமணத்திற்கு முன்னே ஒரு ஆண் வேறு எந்தப் பெண்ணோடும் உடலுறவு கொள்ளக் கூடாது (நாளை மணக்கப் போகும் மனைவி தான் உங்கள் சந்ததியைப் பெற்றுத்தரப் போகிறாள். அவற்றின் இரத்தம் சுத்தமாக இருக்க வேண்டுமானால் உங்கள் பழக்கங்கள் ஒழுக்கமாக இருக்க வேண்டும். அப்போதுதான் உங்கள் இரத்தம் தூய்மையாக இருக்கும்.)

திருமணத்திற்குப் பிறகும் கணவன், மனைவி ஒருத்தியோடு மட்டும் உடலுறவு கொள்வது மிகவும் அவசியம்.

சுத்தம் செய்யப்படாத ஊசிகளின் மூலமும், சோதனை செய்யப்படாத இரத்தத்தின் மூலமும்

எயிட்ஸ் கிருமி பரவ வாய்ப்புள்ளது. எயிட்ஸ்நோய்த் தாக்கியுள்ள ஒருவர் உடலில் செலுத்திய ஊசியை சரியாக சுத்தம் செய்யா விட்டால் அந்த ஊசிமுனையில் தங்கியுள்ள ஒரு சிறிய சொட்டு இரத்தத்திலுள்ள கிருமி மற்றொருவருக்கு ஊசி போடும் போது அவர் உடலுக்குள் சென்று விடுவதற்கு வாய்ப்புள்ளது. ஊசிகளை நன்கு கழுவி 30 நிமிடங்கள் கொதிக்க வைப்பதன் மூலம் ஒன்றிரண்டு கிருமிகள் இருந்தால் கூட அவை கொதிக்கும் சூட்டினால் அழிக்கப்படுகின்றன. அல்லது ஒரு முறை மட்டும் உபயோகிக்கும் ஊசிகளைப்பயன் படுத்தல் நல்லது.

இரத்தம் ஒருவர் உடலுக்குள் செலுத்தப் படுவதற்கு முன்னர் அதில் ''பல நோய்க் கிருமிகள்'' இருக்கின்றனவா என்று பரிசோதிக் கப்படுகிறது. அந்த சோதனையில் எயிட்ஸ் கிருமி சோதனையும் ஒன்று. இது மிகவும் முக்கியம். எவ்வளவு அவசர நிலையாக இருந் தாலும் கூட கிருமிகள் இல்லா இரத்தமா என்று சோதனை செய்த பிறகுதான் கொடுக்க வேண்டும்.

**தவறு செய்வது தாயோ தந்தையோ!**
**தண்டனைபெறுவது அப்பாவி சிசுவா?**

இது அனைத்தையும் காட்டிலும் கொடுமை. தாய் தந்தையரின் தவறான நடத்தையினால் ஒன்றுமறியாத சிசு தண்டனை பெறுகிறது. கருவுற்ற தாயின் இரத்தத்தில் கிருமி இருந்தால், அது குழந்தையின் உடலுக்குள் புகுந்துவிடும். (தாயின் இரத்தத்தின் மூலம் உணவுச் சத்துக் களைப் பெறும் குழந்தை அதோடு சேர்ந்து நோய்க்கிருமிகளையும் பெற்றுக் கொள்கிறது).

**உடலுக்குள் புகுந்த கிருமிகள்**
**பாதிப்பு ஏற்படுத்துவது எப்போது?**

நோய்த் தாக்குதல் ஆரம்பிப்பதற்கு 10 ஆண்டுகளுக்கு மேல் கூட ஆகும்.

நோயாளி,

- இளைத்து
- வெளுத்து
- வலிமை குன்றி
- பொலிவு குன்றி

பலவீனமாகி இறந்து போகிறார்.

**தடுத்து நிறுத்தி வெற்றி காண**
**தக்க வழிகள் இதோ**

நல்ல பழக்க வழக்கங்களே நம்மை இந்த ஆட்கொல்லி நோய் அணுகாது காக்க வல்லமை





உடையது ஆகும். ஒழுக்கமான வாழ்வே நம்மை எயிட்ஸ் நோய் அண்டாத படி காக்கும்.

கணவன் அல்லது மனைவி அந்நியரோடு உறவு கொள்ளுதல் அறவே நிறுத்திவிட வேண்டும்.

**எயிட்ஸைத் தடுப்பதில் நிரோத்தின் பயன் என்ன?**

நிரோத் என்ற ஆணுறையைக் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு மட்டுமே பரிந்துரை செய்து



வந்த மருத்துவத்துறை இன்று எயிட்ஸ் நோயிலிருந்து மனிதனைப் பாதுகாப்பதற்காக நிரோத் என்ற ஆணுறையைப் பரிந்துரைக்கிறது.

எனவே அன்று குடும்பக் கட்டுப்பாட்டிற்கு மிகவும் பயன்பட்ட நிரோத் என்ற ஆணுறை இன்று எயிட்ஸ் நோய்க் கட்டுப்பாட்டுக்கும் பயன்படுகிறது.

ஆண்விந்து நீரிலோ பெண் குறிநீரிலோ எயிட்ஸ் நோய்க் கிருமிகள் கலந்திருக்குமானால் நிரோத் என்ற ஆணுறையினால் கலப்பதிலிருந்து தடுக்கப்படுகிறது.

**அறவே கைவிடவேண்டிய வேறு வேறு பழக்கங்கள்**

ஒருவர் உபயோகித்த பிளேடை உபயோகிக்கக்கூடாது. ஒருவர் உபயோகித்த பிரஷ்ஷை பல் துலக்குவதற்காக பயன்படுத்தக்கூடாது.

ஹெச்.ஐ.வி. இரத்தத்தில் இருப்பவர்களாக இருந்தால்,பல்தேய்க்கும்போது ஈறுகளின் ரத்தம் கசிந்திருந்தால் அவர்கள் உபயோகித்த பிரஷ்சில் ஒருவேளை கிருமிகள் ஒட்டிக் கொண்டிருக்கலாம். வேறொருவர் அதே பிரஷ்ஷைப் பயன்படுத்தும்போது அந்த பிரஷ்ஷிலிருந்து இவருக்கு வருவதற்கு வாய்ப்பு உள்ளதல்லவா?

போதை ஊசி போட்டுக் கொள்ளும் பழக்கம் உள்ளவர்கள் ஒருவர் பயன்படுத்திய ஊசியை மற்றவர் பயன்படுத்துவார்கள். அது தவிர்க்கப்பட வேண்டும்.

எயிட்ஸ் நோய் தற்செயலாகத் தொடுவதாலும் பழகுவதாலும் பரவக்கூடிய வாய்ப்புள்ள ஜலதோஷம், தட்டம்மை போன்ற தொற்று நோய்களைப்போன்றது அல்ல. இது தண்ணீராலும், உணவாலும், காற்றினாலும் பரவக்கூடியது அல்ல.

எயிட்ஸ் யாரை வேண்டுமானாலும் தாக்கலாம்.

**எயிட்ஸ் நோய் எப்படிப் பரவாது என்பதையும் சற்றே அறிக!**

செல்லப் பிராணிகள் மூலம் எயிட்ஸ் பரவாது.

கொசுக்கள் மூலம் எயிட்ஸ் பரவாது.

இரத்த தானம் செய்வதால் எய்ட்ஸ் நோய் ஒருவரைத் தாக்காது.

எயிட்ஸ் கிருமி இரத்தத்தில் நுழைந்து விட்டிருக்கும் மனிதர்கள் கிருமி நுழைந்து சில

ஆண்டுகள் வரை ஆராக்கியமானவர்களாகக் காட்சியளிக்கின்றனர்.8 லிருந்து 10 ஆண்டுகளில் நோயின் தீவிர அறிகுறிகள் வெளிப்படுகின்றன.

உடலுக்கு வெளியே இந்த வைரஸ் அதிக நேரம் உயிர் வாழ்வதில்லை.

வெப்பம், வறட்சி, சோப்புநீர், கிருமிநாசினிகள் ஆகியவை இந்த வைரஸை அதிகம் அழிக்க வல்லவை.

எயிட்ஸ் பரம்பரை நோயல்ல. ஆனால் தாய்க்கு இருந்தால் கருவிலுள்ள குழந்தைக்கு நோய் தாக்க வாய்ப்பு உள்ளது.

இரத்தத்தில் ஹெச்.ஐ.வி. கிருமி இல்லாதவர் இரத்ததானம் செய்வதால், அவருக்கோ, இரத்தம் பெறுபவருக்கோ நோய் தாக்க வாய்ப்பில்லை.

எயிட்ஸ் கிருமி இரத்தத்தில் உள்ளதை ''இரத்தசோதனை'' மூலம் தெரிந்து கொள்ளலாம்.

எயிட்ஸ்நோய் தாக்கப்பட்டவர்களை சமூகம் நண்பர்களாகவே கருத வேண்டும். அவர்கள்பால் கருணையும், அன்பும் கொள்ள வேண்டும். அவர்கள் விலக்கப்பட வேண்டியவர்கள் அல்ல. அதனால் இரத்த தானம்செய்யத் தயங்காதீர்கள்.

## அட்டைப்பட விளக்கம்

**முதல் அட்டை:**

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் - அட்லாண்டாவில் நடக்கும் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளச் செல்லும் இந்திய ஒலிம்பிக் ஹாக்கி அணியினர் சந்திப்பு (28.6.96).

**இரண்டாம் அட்டை:**

ஊட்டச்சத்து வழங்கும் பயறுவகைப் பயிர்கள் (கட்டுரை 40-ஆம் பக்கம்).

**கடைசிப்பக்க அட்டை:**

பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் (15.7.1903) நினைவாக.


## தமிழரசு வாசகர்களே!
## தமிழகப் பொதுமக்களே!

இன்னும்தீர்க்கப்படவில்லையே என்று நீங்கள் ஏங்கி நிற்கும் பிரச்சினை ஏதும் உங்கள் பகுதியில் உள்ளதா? உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை, நிறைவேறாமல் கிடக்கும் நீண்ட காலக் கோரிக்கை இப்படி எதுவாயினும் உடனே ''தமிழரசு'' இதழுக்கு எழுதுங்கள். அப்பிரச்சினை தொடர்பான துறையின் உயர் அலுவலர்களிடமிருந்து பதில் பெற்று 'தமிழரசு' இதழில் வெளியிடப்படும்.

இப்பகுதிக்கு நீங்கள் எழுதிட நிபந்தனை ஏதுமில்லை. வேண்டுகோள் மட்டுமே உண்டு. உங்கள் கோரிக்கை பொதுநல நோக்கோடு அமையவேண்டும்என்பதே அது.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி:

**''எங்கள் ஊர்ப் பிரச்சினை''**
'தமிழரசு'
அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை,
சென்னை - 600 002.



மாணவர் பக்கம்

# கேள்வியும் பதிலும்

ஒரு ஊரில் ஓர் ஆள் இருந்தான். அவன் காலையிலிருந்து கடும் குளிரில் நடந்த களைப்பினால், மாலையில் ஒரு வீட்டைக் கண்டதும், அதன் கதவைத் தட்டினான். வீட்டுக்காரன் கதவைத் திறந்தான். அவனைப்பார்த்து, பிரயாணி, ''காலையிலிருந்து நடந்ததால் மிகவும் களைப்பாக இருக்கிறது. அதோடு குளிரும் மிகவும் அதிகமாக இருக்கிறது. இனி தெருவில் இருப்பது என்பதும் முடியாது. ஆகவே இன்று இரவு மாத்திரம் தங்குவதற்கு இடமும் கொடுத்து, சாப்பாடும் போட்டால் நீங்கள் கேட்கும் பணத்தைக் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்'' என்றான்.


அதற்கு வீட்டுக்காரன், ''உனக்கு சாப்பாடு போட்டு படுக்க இடம் கொடுப்பதில் எனக்கு ஆட்சேபனை இல்லை. ஆனால் எனக்குப் பணம் வேண்டாம். அதற்குப் பதில் நான் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் நீ சரியான பதில் சொல்ல வேண்டும். தப்பாக பதில் சொன்னாயோ கன்னத்தில் ஓர் அறை அறைவேன்'' என்றான்.



வேறு வழியின்றி பிரயாணி இதற்கு ஒப்புக்கொண்டான்.

வீட்டுக்காரன் பிரயாணிக்கு வயிறு நிறையச் சாப்பாடு போட்டான்; தானும் வயிறு நிறையச் சாப்பிட்டான். பிறகு இருவரும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கையில், வீட்டுக்காரன், ஒரு மூலையில் படுத்திருந்த ஒரு பூனையைச் சுட்டிக் காட்டி, ''அது என்ன?'' என்று கேட்டான். ''அது பூனை'' என்றான் பிரயாணி. உடனே வீட்டுக்காரன் பிரயாணியின் கன்னத்தில் ஒரு அறைந்து, ''உன் பதில் தப்பு. அது பூனை





யல்ல, வெண்மை'' என்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வீட்டுக்காரன் கூஜாவில் இருந்த தண்ணீரைக் காண்பித்து, ''அது என்ன?'' என்று கேட்டான்.

''தண்ணீர்'' என்று பதிலளித்தான் பிரயாணி.


''உடனே வீட்டுக்காரன் பிரயாணியின் கன்னத்தில் ஒரு அறை அறைந்து, ''உன் பதில் தப்பு, அது தண்ணீர் இல்லை, சுத்தம்'' என்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வீட்டுக்காரன், கணப்பு அடுப்பில் எரிந்து கொண்டிருந்த நெருப்பைச் சுட்டிக் காட்டி, ''அது என்ன?'' என்று கேட்டான்.

''நெருப்பு'' என்றான் பிரயாணி. உடனே வீட்டுக்காரன் பிரயாணியின் கன்னத்தில் மறுபடியும் ஒரு அறை அறைந்து, ''உன் பதில் தப்பு, அது நெருப்பு அல்ல, சுகம்'' என்றான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வீட்டுக்காரன் பரணைச் சுட்டிக் காட்டி, ''அது என்ன?'' என்று கேட்டான்.

''பரண்'' என்றான் பிரயாணி. உடனே வீட்டுக்காரன் கன்னத்தில் மீண்டும் ஒரு அறை அறைந்து, ''உன் பதில் தப்பு, அது உயரம்'' என்றான்.



பாவம், பிரயாணிக்கு வலி பொறுக்க முடியவில்லை. ஆகவே வீட்டுக்காரனைப் பார்த்து, ''என் மூளை சற்று மழுங்கிவிட்டது என்று நினைக்கிறேன். அதனால்தான் உன் கேள்விக்கு என் பதில்கள் எல்லாம் தப்பாகவே போய் விட்டன. நான் சற்று வெளியில் சென்று ஆசுவாசப்படுத்திக் கொண்டு வருகிறேன், அதற்குப் பிறகாவது நீ கேட்கும் கேள்விகளுக்குச் சரியான பதில் சொல்ல முடிகிறதா என்று பார்க்கிறேன்'' என்றான்.


வீட்டுக்காரன் சரியென்று இசையவே, பிரயாணி வெளியில் சென்றான். அவன் வெளியே வந்ததும் பூனையும் வெளியே வந்தது.

வெகு கோபமாக இருந்த பிரயாணி பூனையைப்பிடித்து, அதன் வாலில் சில சுள்ளிகளைக் கட்டி அதில் நெருப்பு வைத்தான். நெருப்பைக் கண்டு பயந்த பூனை பரண்மீது தாவிற்று.

உடனே பிரயாணி உள்ளே வந்து, வீட்டுக்காரனைப் பார்த்து, ''வெண்மை சுகத்தை எடுத்துக்கொண்டு உயரத்திற்குப் போயிருக்கிறது. ஆகவே உடனே சுத்தத்தைக் கொண்டு சுகத்தை அகற்று'' என்றான்.

வீட்டுக்காரன் ஒன்றும் புரியாமல் திகைத்தான். ''என்ன சொல்லிக் கொண்டிருக்கிறாய்?'' என்று கேட்டான்.

அதற்குப் பிரயாணி அவன் கன்னத்தில் ஒரு அறை அறைந்து, ''இவ்வளவுதானா உன் புத்திசாலித்தனம்! உன் வீடு தீப்பற்றிக் கொண்டு எரிகிறது'' என்று சொல்லி விட்டு மறைந்தான்.



இது ஒரு யூகோஸ்லாவியக் கதை.



# வாசகர் இதயம்

புதிய ஆட்சி மலர்ந்தாலும் கூட 'தமிழரசு' முழுவதும் முதலமைச்சர் படங்களாகத்தான் இருக்கும் என்று ஒரு நண்பரிடம் நான் பந்தயம் கட்டியிருந்தேன். தேர்தல் முடிவுகள் இதழ் (16.5.96) வந்ததுமே உங்களால் எனக்கு ரூ. 100 நஷ்டம் போங்கள்.

**– சு. குணசேகரன்**
ஆணைக்குப்பம், திருவாரூர்

கலைஞரின் கவிதை, குறளோவியம் போன்றவை மட்டுமன்றி - புதுமைப்பித்தன் சிறுகதை முல்லாவின் கதை இயற்கை அன்னையின் கோபம் எனப் படிப்பதற்காகத் தமிழரசில் ஏராளமான பக்கங்கள் இருந்தன; உள்ளபடியே அசத்திவிட்டீர்கள்.

**– க. விஜி**
திருவொற்றியூர்

ஆசிரியர் பக்கத்தில் சொல்லப்படும் செய்திகள் மட்டுமல்ல; புதுமை பூத்த நடையே அற்புதம், தொடரட்டும் உங்கள் தமிழ்ப்பணி.

**– ச. செந்தில்**
செங்கற்பட்டு

தமிழரசில் வரும் மருத்துவக் கட்டுரைகள், அறிவியல் செய்திகள் எல்லாம் மிகவும் பயனுள்ளவைகளாக இருக்கின்றன. எங்கள் குடும்பத்தின் நல்வாழ்த்துக்கள்.

**– கே.எஸ். வெள்ளியங்கிரி**
கோயம்புத்தூர்

வெறும் புகைப்படங்களைப் போட்டே பக்கத்தை ஒப்பேத்தாமல் பயனுள்ள விஷயங்களின் புதுமைக் களஞ்சியமாகத் திகழ்கிறது தமிழரசு. ஆட்சி மட்டுமல்ல; தமிழரசும் மாறியிருப்பது கண்டு உள்ளம் பூரித்தோம்.

**– மு. பிச்சையா, சுந்தர்**
திருநெல்வேலி

அந்தக் காலத்தில் தமிழரசு நடத்திய வெண்பாப் போட்டிகளிலெல்லாம் கலந்துகொண்டவன் நான்; நீண்ட காலத்திற்குப் பிறகு இப்போது கவிதைப்போட்டி தொடங்கியிருக்கிறீர்கள். மகிழ்ச்சி.

**– கவிஞர்.பெ. பிரபாகரன்**
சென்னை - 78


கலீல் கிப்ரான் கவிதையின் தமிழாக்கம் என் மனதைக் கொள்ளை கொண்டது; நலிந்து வரும் புதுக்கவிதைக்கு நலமும் பலமும் தரும் வகையில் உள்ள உங்கள் தமிழ்ப்பணி வெல்க.

**– அழகரசன் - அம்பிகா**
மதுரை

# பாரதியார் இல்லத்தில் நூலகம்

சென்னை திருவல்லிக் கேணியில் மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லம் உள்ளது. அரசுடைமை யாக்கப்பட்ட இந்த நினைவு இல்லத்தில் பாரதியார் புகைப் படக் கண்காட்சி மட்டுமே இடம் பெற்றுள்ளது. மகாகவியின் சிறப்பை மக்கள் மனதில் மேலும் நிலை நிறுத்தும் வகையில் பாரதி நூலகம் ஒன்றை அமைத்திடுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு உள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப இந்நூலகத்தில் பாரதியாரின் அனைத்து வகை படைப்புகள், பாரதியார் பற்றி, அவரின் நூல்கள் பற்றி பெருமக்கள் எழுதிய அனைத்து நூல்கள், பாரதியார் பற்றிய பிறமொழி நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள் போன்றவை இடம் பெற உள்ளன. மேலும், பாரதியார் காலத்திய பழந்தமிழ் நூல்களும், நாளிதழ்களும், இங்கு லேமினேட் செய்து பார்வைக்கு வைக்கப் படும். நூலகம் சிறப்பாக அமையவும், நூலகத்தைப் பார்வையிடும் மக்களுக்கு தகுந்த வசதிகள் செய்து தரவும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.



மாண்புமிகு செய்தி, விளம்பரத் துறை அமைச்சர் திரு வ. முல்லை வேந்தன் அவர்கள், ஜூலை 8ஆம் நாள் மகாகவி பாரதியார் நினைவு இல்லத்தைப் பார்வையிட்டார். நினைவு இல்ல வளாகத்திலுள்ள திறந்த வெளி அரங்கில் பள்ளிக் குழந்தைகளின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் இலக்கியக் கூட்டங்கள் நடத்தும் வகையில் அனைத்து விதமான வசதிகள் ஏற்படுத்தவும் பாரதியார் தொடர்புடைய இசைப் பாடல்கள் ஒலிபரப்ப நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், வாரந் தோறும் விடுமுறை நாட்களில் பள்ளிக் குழந்தைகளை வைத்து பாரதியார் பாடல்களை மையமாக வைத்து கலைநிகழ்ச்சிகளைத் தயாரிக்கவும், பாரதியார் பற்றிய செய்திப் படத்தைப் பார்வையாளர்களுக்குத் திரையிட்டுக் காட்டுமாறும் குழந்தைகளுக்கு நாட்டுப்பற்று ஊட்டும் வகையில் நினைவில்லத்தை முழுமையாகப் பயன்படுத்துமாறும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

மேலும் இந்நினைவில்லத்தில் குடிநீர் வசதி சரிவர அமைந்திட, ஏற்கனவே அங்கிருக்கும் பாழடைந்த கிணற்றைத் தூர் எடுத்து சுத்தப் படுத்தவும் இந்நினைவில்ல வளாகத்திலுள்ள திறந்த வெளி மேடையில் நிகழ்ச்சிகள் நடத்த ஏதுவாக பிளாஸ்டிக் இழையிலான மேற்கூறை அமைக்கவும் பொதுப் பணித்துறை மூலம் நடவடிக்கை மேற் கொள்ளுமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

# முதல்வர் ஆணை

# இரக்கம்



மறியே!
செம் மறியே!

மேயப் போகிறாயா?
போ!

அதோ!
அந்த –
மலையடி வாரத்தில்
நல்ல மூலிகைகள்
மலிந்து கிடக்கின்றன;


அவைகளை மேய்!


தப்பித் தவறி
விஷப் பூண்டுகளில்
வாயை வைத்து விடாதே!

உனக்கு ஒன்று
நேர்ந்து விட்டால்
என் உள்ளம்
குலுங்கிக் குலுங்கிக்
குழந்தை போல்
அழும்!

ரொம்பவும்
துள்ளாதே!
நிதானமாகப் போ!

உன்
முட்டி எலும்புகள்
முறிந்து விட்டால்
என்
கண்களை
முட்டிக் கொண்டு
கண்ணீர் வரும்!





புத்தன் கூட
உன்னைக்
கையில்தான் ஏந்தினான்
நான் கண்ணில்
ஏந்திக்கொண்டிருக்கிறேன்!

எனவே
உன்னைத்தேடும்படி
வைக்காதே!

இருட்டியதும்
நீயாகவே வீடு
திரும்பி விடு!

திண்ணையில்
நல்ல
காற்று வரும்;

முதுகரிப்புக்கு
இதமாகத் தூண்களும்
இருக்கின்றன

விடியும் வரையில்
அரைத்தூக்கத்தில்
ஆனந்தமாக
அசை போடு!

விடிந்த
பிறகு தான்

பக்ரீத்!

-கவிஞர் வாலி அவர்கள் எழுதிய
'பொய்க்கால் குதிரை' எனும்
நூலிலிருந்து.



## தரிசு நிலம் மேம்படுத்த தக்க ஆலோசனை வழங்கும் நிபுணர் குழு

தமிழகத்தில் உள்ள தரிசு நிலங்களை மேம்படுத்திப் பயன்படுநிலமாக மாற்ற, நீர்ப்பிரி முகடு மேலாண்மை (Watershed Management) வறுமை ஒழிப்புத்திட்டம் போன்றவைகளை ஆதாரமாகக் கொண்டு ஏழைமக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தத் தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது. இதன் முதல்கட்டமாக, தமிழ்நாடு அரசுக்கு ஆலோசனை வழங்க ஒன்பது உறுப்பினர்கள் கொண்ட குழுவை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அமைத்துள்ளார்.

இந்திராகாந்தி தேசிய திறந்த வெளி பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் டாக்டர். வா.செ. குழந்தைசாமி தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இக் குழுவில், விவசாய அறிவியல் அறிஞர் எம்.எஸ். சுவாமி நாதன், பொருளாதார நிபுணர் திரு.எஸ்.குகன், எம்.ஐ.ஐடி.எஸ் ஸைச் சேர்ந்த பேராசிரியர் வைத்தியநாதன், பெரியகுளம் வேளாண்மைக் கல்லூரி முதல்வர். திரு. சாம்பமூர்த்தி வேளாண்மைப் பல்கலைக் கழகப் பேராசிரியை திருமதி ராணி பெருமாள், முன்னாள் தலைமைப் பொறியாளர் திரு. மோகனகிருஷ்ணன், தொலை தூர உணர்வு மைய இயக்குநர் திரு. நடராசன், அண்ணா பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. சி.ஏ. பண்டரிகாந்தன் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

### முதல்நிலை மாணவர் மேற்படிப்புச் செலவு தமிழக அரசு ஏற்கிறது

தமிழ்நாட்டிலேயே 10 ஆம் வகுப்பு மற்றும் +2 தேர்வுகளில் முதல் மூன்றுநிலைகளில் வெற்றிபெறும் மாணவ, மாணவிகளின் மேற்படிப்பிற்காக ஆகும் செலவை தமிழ்நாடு அரசே ஏற்கும் என்ற மகிழ்ச்சியான செய்தியை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்.

# செய்திச்சரம்


ஒலிம்பிக் போட்டியில் இந்திய ஆக்கி அணி மோதும் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ஜூலை 20 – | இந்தியா | - அர்ஜெண்டினா |
| ஜூலை 22 – | இந்தியா | – ஜெர்மனி |
| ஜூலை 24 – | இந்தியா | – அமெரிக்கா |
| ஜூலை 26 – | இந்தியா | – பாகிஸ்தான் |
| ஜூலை 28 – | இந்தியா | – ஸ்பெயின் |
| ஜூலை 31 – | இந்தியா | – அரை இறுதி போட்டிகள் |
| ஆகஸ்டு 2 – | | இறுதிப்போட்டி |

### வளமான வாழ்விற்கு வைக்கோல் காளான்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் வைக்கோல் காளான் உற்பத்தியில் பருத்திக் கழிவுகள், கரும்புச்சக்கை, வேப்பிலை, தவிடு கடலைக்கூடு மற்றும் கோழியின் கழிவு போன்றவற்றைச் சுத்தப்படுத்தி வைக்கோல் கூளத்துடன் கலப்பதன் மூலம் காளான் மகசூலை அதிகரிக்க முடியும் என ஆய்வு செய்து வெளியிட்டுள்ளார்கள். வைக்கோல் கூளத்துடன் வேப்பிலையைக் கலப்பதன் மூலம் மற்ற பொருள்களைவிட மகசூல் அதிகம் கிடைப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

சிப்பிக்காளான் வளர்க்க இந்த முறை ஏற்றதாகவும் இதனால் நல்ல பலன் கிடைக்கிறது என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



## ஒலிம்பிக் போட்டியாளர்கள் முதல்வருடன் சந்திப்பு

அட்லாண்டாவில் நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிக்கு தேர்வு செய்யப்பட்ட இந்திய தடகள வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் 2.7.1996 அன்று தலைமைச் செயலகத்தில் தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் சந்தித்தார்கள். தமிழக முதலமைச்சர் அவர்கள் தடகள வீரர்களுக்குப்பரிசுகள் வழங்கி வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள். தமிழ் நாட்டில்தடகளபந்தயத்திற்கான இறுதித் தேர்வு செய்யப் படுவது இதுவே முதல் முறையாகும் என்பது குறிப்பிடத் தக்கது.

# செய்திச்சரம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை
✻ திரு. பகதூர் பிரசாத் ✻ திருமதி பி.டி. உஷா ✻ சைனி வில்சன்
✻ ரோசாகுட்டி ✻ ஜீனியா அயர்டோன் ✻ பீனா மோள்
✻ ஜோதிர்மாய் சிக்தர்
ஆகிய ஒலிம்பிக் போட்டியாளர்கள் தடகள வீரர்கள்
2.7.96 அன்று சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

## தமிழ்நாட்டைச் சேர்ந்த மருத்துவர்களுக்கு பி.சி. ராய் விருது

டாக்டர் பி.சி. ராய் நினைவாக ஒவ்வோராண்டும் ஜூலை - முதல் தேதி மருத்துவர்கள் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. பி.சி. ராய் விருதுகளை இந்திய மருத்துவக் கழகம் இந்த ஆண்டு அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மூன்று மருத்துவநிபுணர்களுக்கு இந்த மதிப்புக்குரிய விருது கிடைத்தள்ளது. எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகச் சிறப்புப் பேராசிரியரும் புகழ்பெற்ற மகப்பேறு, மகளிர்நோய்ச் சிகிச்சை நிபுணருமான டாக்டர் பழனியப்பன், சென்னை மருத்துவக் கல்லூரியில் நாளமில்லாச் சுரப்பிகள் அறுவைச் சிகிச்சை துறைத்தலைவர் டாக்டர் எஸ். விட்டல், டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மேஜர். டி. ராஜா ஆகியோருக்குத் தாங்கள் மேற்கொண்ட துறைகளில் சிறப்பான பணிபுரிந்தமைக்காக அவர்களைப் பாராட்டி பி.சி.ராய் விருதுகள் வழங்கப் பட்டுள்ளன.

## அட்லாண்டா ஒலிம்பிக் போட்டி இந்திய அணி அறிவிப்பு

அட்லாண்டா ஒலிம்பிக் தடகளப் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணிக்கு 6 பேர் தேர்ந் தெடுக்கப்பட்டுள்ளனர். இந்திய மகளிர் தொட ரோட்ட (ரிலே) அணியில் ஷைனி வில்சன், ரோசா குட்டி, ஜோதிர்மாய்சிக்தர், பீனா மோள், பி.டி. உஷா ஆகியோர் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். இந்திய மகளிர் தொடர் ஓட்ட அணியினரது மிகச்சிறந்த ஓட்டநேரம் 3:34 : 0 வினாடி களாகும். தொடரோட்டம் தவிர தனிநபர் ஓட்டப் போட்டிகளிலும் இவர்கள் பங்கேற்பர். இதுபற்றி ஒலிம்பிக் போட்டியின் போதுதான் தீர்மானிக்கப் படும்.

ஆடவருக்கான 1500 மீ. ஓட்டத்தில் பகதூர் பிரசாத் கலந்து கொள்கிறார். இவரது மிகச்சிறந்த ஓட்ட நேரம் 3:38:0 வினாடி களாகும்.


இவர்களைத் தவிர வட்டு எறிதல் போட்டியில் பங்கேற்கும் சக்தி சிங், 400 மீட்டர் ஓட்டத்தில் பங் கேற்கும் பரம்ஜீத் சிங் ஆகிய இருவரது பெயர்களும் அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப் பட்டுள்ளது.

மேற்கண்ட தகவல் களை அகில இந்திய அமெச்சூர் அதெலடிக் சம்மேளனச் செயலர் திரு. லலித் பனோட் தெரிவித்தார்.

# ஊட்டச்சத்து வழங்கும் பயறு வகைப்பயிர்கள்

**சிவசூரியன்,** இ.ஆ.ப.,
வேளாண்மைக் கூடுதல் இயக்குநர், (ப.மே.)

''**பா**ரினுக்கு நல் உணவளிக்க, பயறு வகைகளைச் சாகுபடி செய்வோம்! பயறு வகைகளில் தன்னிறைவு பெறுவோம்! மக்களுக்கு மனநிறைவளிப் போம்!''



பருப்பு இல்லாமல் சாம் பாரா? என்று பட்டி தொட்டி களிலும் கேட்கும் அளவிற்கு நம் நாட்டின் உணவு முறையில் பருப்பு முக்கியத்துவம் பெற் றுள்ளது. பருப்பு வகைகள் நம் உணவோடு, வாழ்க்கை முறை யோடு ஒன்றிப்போன ஒன்று.

பயறு வகைகள் நம் நாட்டின் உணவுப் பழக்கத்தில், குறிப்பாகத் தமிழ் நாட்டின் உணவு வகைகளுடன் ஒன்றிவிட்ட ஒரு சிறப்புப் பயிர். பயறு வகை சேர்க்கப்படாத உணவுப் பழக்கமே நம் நாட்டில் இல்லை என்று சொல்லலாம். பயறு வகைகள் சேர்க்கப்படாத எந்த உணவும் முழுமை பெற்ற உணவாக ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. குறிப்பாகச் சைவ உணவுப் பழக்கமுள்ள மக்களுக்கு உணவில் பயறு வகைகள் சேர்ப்பது மிக முக்கியம். இப்பயறு வகைகளின் மூலம்தான் அவர்களின் உடல் நலத்திற்குத் தேவையான புரதச்சத்து கிடைக்கிறது.

சமீப ஆண்டுகளில், பயறு வகைகளின் சாகுபடி பரப்பு, உற்பத்தி, உற்பத்தித்திறன், பயறு உற்பத்தி அதிகரிக்கத் தேவையான தொழில் நுட்பங்கள், பயறு வகை களின் சிறப்பு ஆகியவைகள் பற்றி சற்று அதிகமாகவே எல்லா நிலை யிலும் பேசப்பட்டும், எழுதப் பட்டும் வருகின்றன.

மாநில அரசும், மத்திய அரசும் பயறு வகை உற்பத்தியில் தனிக் கவனம் செலுத்தி, பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

வேளாண்துறை மற்றும் வேளாண் விஞ்ஞானிகளின் கவனமும் முன்பு எப்போதும் இல்லாத அளவு, சமீப காலமாகப் பயறு சாகுபடியிலும், பயறு சாகுபடி சம்பந்தப் பட்ட தொழில் நுட்பத்திலும் தனி அக்கறை காட்டும் வகையில் திசை திருப்பப்பட்டுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது.

## பயறு வகைகளின் சிறப்பு:

மனித வாழ்க்கைக்குத் தேவையான புரதச்சத்தைத் தருவது பயறு வகைகள். மிகக் குறுகிய காலத்திலேயே அறுவடைக்கு வந்து பலன் தரும் பயிர்களில் பயறு வகைகள் மிகவும் முக்கியமானதாகும்.

தனிப் பயிராகவும், கலப்புப் பயிராகவும், ஊடுபயிராகவும், நெல் பரப்புகளிலும், மானாவாரியாகவும், இறவையாகவும், நெல் தரிசிலுமாகப் பல வழிகளில் சாகுபடி செய்வதற்கு ஏற்ற சிறப்புத் தன்மை கொண்டவை பயறு வகைகள்.

முதல் போகம் சாகுபடி முடிந்து, இரண்டாம் போகம் சாகுபடி ஆரம்பத்திற்கிடையிலுள்ள இடைக்காலத்தை வெற்றிகரமாக, இலாபகரமாகப் பயன்படுத்தும் வகையில் பயறு வகைகளை உழவர் பெருமக்கள் சாகுபடி செய்து, அதிக செலவில்லாமலேயே நல்ல வருவாய் பெறக்கூடிய வாய்ப்பு பயறு வகைகள் சாகுபடி வழியாகத்தான் உண்டு.

**"அதிக செலவில்லாமலேயே நல்ல வருவாய் பெறக்கூடிய வாய்ப்பு பயறு வகைகள் சாகுபடி வழியாகத்தான் உண்டு"**

### தனிச்சிறப்பு:

மற்ற எல்லா பயிர் சாகுபடியைக் காட்டிலும், பயறு வகைகளுக்குத் தனிச் சிறப்புத் தன்மை ஒன்று உண்டு. மற்ற எந்தப் பயிர்களைச் சாகுபடி செய்தாலும், மண்ணின் சத்துக்கள், குறிப்பாகத் தழைச்சத்து அதிகமாக உறிஞ்சப்படுகிறது. அதனை ஈடு கட்டியும், பயிர்கள் நன்கு வளரவும் அதிகத் தழைச்சத்து உரம் இட வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

மாறாக, பயறு வகைகளைச் சாகுபடி செய்யும்போது அதிகத் தழைச்சத்து இடத் தேவையில்லை. அதே சமயத்தில், பயறு வகைகள் சாகுபடி செய்யும் நிலத்தில் மண் வளம் அதிகரிக்க ஏதுவாகிறது. பயறு வகைகளின் வேர் முடிச்சுக்களில் ''டிரசோபியம்'' என்னும் ஒரு பாக்டீரியா உள்ளது. இந்த பாக்டீரியா காற்று மண்டலத்தில் இயற்கையாக உள்ள தழைச்சத்தைத் கிரகித்து, மண்ணிற்குக் கூடுதல் வளம் சேர்க்கும் சிறப்புத் தன்மை கொண்டது.

இப்படி எல்லா வகைகளிலும் சிறப்புத் தன்மை கொண்ட பயறு வகைகள் சாகுபடியில் உழவர் பெருமக்கள் சற்று சிறப்புக் கவனம் செலுத்தி, சாகுபடி செய்தால் அமோகப் பயறு விளைச்சலுடன் அதிக வருவாயும் எளிதில் நிச்சயம் எதிர்பார்க்கலாம்.

பயறு சாகுபடியில், மற்ற பயிர்களைப் போல் அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் இருப்பதாலும், பயறு வகைகளின் உணவுச் சிறப்பை முழுமையாகப் புரிந்து கொள்ளாததாலும், பயறு வகை உற்பத்தியில் சற்றுத் தொய்வு ஏற்பட்டுள்ளதாக நினைக்கத் தோன்றுகிறது.


### பயறு சாகுபடி – தற்போதைய நிலை:

தமிழ்நாட்டில் பயறு வகைகளில் சாதாரண (normal) சாகுபடிப் பரப்பு, உற்பத்தி, உற்பத்தித் திறன் ஆகியவைகளைப் பார்க்கும்போது, பயறு சாகுபடியில் நாம் இன்னும் முழுக் கவனம் செலுத்தவில்லை என்றே தோன்றுகிறது. பயறு வகைகளின் தற்போதைய உற்பத்தி அளவு, (Maximum possible yield) சாத்தியப்படக்கூடிய முழு உற்பத்தி அளவைக் காட்டிலும் மிகவும் குறைவாகவே உள்ளது என்று தோன்றுகிறது. இதற்கு முக்கியக் காரணம், மற்ற பயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது போல் பயறு வகைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காதது நன்கு விளங்கும்.

### முக்கியக் காரணங்கள்:

◆ பயறு வகைப் பயிர் சாகுபடியில் அவற்றின் முழு உற்பத்தித் திறனை நாம் பெற முடியவில்லை. அதற்குரிய காரணங்களாவன:-

- ◆ பயறுவகைப் பயிர்களுக்கு முக்கியத்துவம் அளிக்காமல் அவற்றைப் பெரும்பாலும் வளமற்ற நிலங்களில் சாகுபடி செய்வது.
- ◆ பயறுவகைப் பயிர்கள் சாகுபடியாகும் மொத்தப் பரப்பில் பெரும்பான்மையாக (80%) மானாவாரியில் சாகுபடியாவது.
- ◆ தனிப்பயிராகச் சாகுபடி செய்யாமல் பெரும்பாலும் கலப்புப் பயிராகவோ ஊடுபயிராகவோ சாகுபடி செய்வது.
- ◆ வேறுபட்ட மண்வகை மற்றும் சாகுபடி அமைப்புக்கு ஏற்ற அமோக விளைச்சல் திறன் கொண்ட இரகங்களைப் பயன்படுத்தாமை.
- ◆ உள்ளூர் இரகங்களை அதிகமாகப் பயன்படுத்துவது.
- ◆ நோய் மற்றும் பூச்சித் தாக்குதலைத் தாங்கி வளரக்கூடிய இரகங்கள் இல்லாமை.
- ◆ சிபாரிசு செய்யப்படும் தொழில் நுட்பங்களை உரிய காலத்தே செயல் படுத்தாமை.
- ◆ செலவே இல்லாத தொழில் நுட்பங்களைக் கூட முழுமையாகக் கடைப்பிடிக்காமை.
- ◆ பருவத்தே பயிர் செய்யாதது. களைகளைக் கட்டுப்படுத்தாமல் இருப்பது; தேவையான உர உபயோகம் மற்றும் நுண்ணுயிர் கலக்காமல் விதைப்பது.
- ◆ பயிரில் தோன்றும் பூச்சி, பூசன நோய்களைக் கட்டுப்படுத்த தேவையறிந்து பயிர்ப் பாதுகாப்பு மேற்கொள்ளாதது.



ஒரு தனி மனிதனுக்குத் தேவையான புரதச் சத்து தொடர்ந்து கிடைக்க, நாள் ஒன்றுக்கு சுமார் 85 கிராம் பயறு வகைகளை உணவுடன் ஒவ்வொருவரும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கணக்கிடப் பட்டுள்ளது. அதன்படி தமிழ் நாட்டிற்கு ஆண்டிற்கு சுமார் 11 இலட்சம் டன் பயறு வகைகள் தேவைப்படுகின்றன.

ஆனால், பயறு வகைச் சாகுபடியில் நம்முடைய மெத்தனப் போக்கின் காரணமாக, நமது ஆண்டு பயறு சாகுபடிப் பரப்பு சுமார் 10 இலட்சம் எக்டராகவும், உற்பத்தி சுமார் ஐந்து இலட்சம் டன்னாகவும்தான் உள்ளது. தமிழ் நாட்டின் பயறு உற்பத்தித்திறன் எக்டருக்கு 460 கிலோதான். நமது பயறு வகைத் தேவையை ஈடுகட்ட பிற மாநிலங்களையும், மற்ற நாட்டையும் எதிர் நோக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு உள்ளோம்.

எனவே, இவ்வாண்டிலிருந்தாவது, பயறு வகைகள் சாகுபடியில் தனி ஊக்கம் செலுத்தினால், பயறு உற்பத்தியில் நம் மாநிலம் தன்னிறைவு பெறுவதுடன், மற்ற மாநிலங்

களுக்கும் ஏற்றுமதி செய்யும் அளவிற்கு வாய்ப்புள்ளதைச் சமீப பெருமழை நமக்கு அளித்துள்ளது.

## தென்மேற்குப் பருவ மழையும் ஆடிப்பட்ட பயறு சாகுபடியும்:

தற்போது, தமிழகம் முழுவதும் தென்மேற்குப் பருவமழை, கடந்த சுமார் 100 ஆண்டுகளில் எப்போதும் இல்லாத வகையில் பருவ ஆரம்பத்திலேயே மிக அதிகமான அளவு பெய்துள்ளது.

ஆடிப்பட்டம் ஆரம்பத்திலேயே இப்படி ஒரு மழை கொட்டோ கொட்டு என்று கொட்டி, பயறு வகைகள் சாகுபடிக்கு நல்ல வாய்ப்பளித்தது.

சமீப காலங்களில் இதுவே முதல் வாய்ப்பு என்று சொல்லலாம். எனவே இந்த வாய்ப்பை நன்கு பயன்படுத்தும் வகையில், நடப்பு ஆடிப்பட்டத்தில் பயறு வகைகளை மானாவாரியாகப் பயிர் செய்து, குறுகிய காலத்தில், நல்ல மகசூலும், வருவாயும் பெற இதுவே உகந்த தருணம். இந்த வாய்ப்பினை நழுவ விடாமல் உழவர் பெருமக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

> "வேளாண் விரிவாக்கப் பணியாளர்களைக் கலந்தாலோசித்து பருவத்திற்கேற்ற, தங்கள் பகுதிக் கேற்ற பயறு இரகங்களைத் தேர்வு செய்திடுக"

ஆடிப்பட்டத்தில் உளுந்து, பச்சைப்பயறு, தட்டைப் பயறு, துவரை, மொச்சை போன்ற பயறு வகைகளை மானாவாரியாகச் சாகுபடி செய்ய முனைப்பாகச் செயல்பட வேண்டும். சாகுபடி பரப்பையும், உற்பத்தியையும், உற்பத்தித் திறனையும் அதிகரிக்கச்செய்ய வேண்டும்.

பயறு வகைகள் சாகுபடி செய்யத் தொடங்கும் முன் உழவர் பெருமக்கள் தங்கள் பகுதி வேளாண் விரிவாக்கப் பணியாளர்களைக் கலந்தாலோசித்து பருவத்திற்கேற்ற, தங்கள் பகுதிக்கேற்ற பயறு இரகங்களைத் தேர்வு செய்ய வேண்டும்.

தேவையான அனைத்துப் பயறு இரகங்களும் அந்தப் பகுதி வேளாண் விரிவாக்க மையங்களில் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டு உள்ளது. சரியான பயிர் எண்ணிக்கை பராமரிக்க விதை அளவு மிக முக்கியம். உளுந்து, பச்சைப்பயறு தட்டைப்பயறு போன்ற பயறு இரகங்களைத் தனிப்பயிராகச் சாகுபடி செய்ய எக்டேருக்கு சுமார் 20 முதல் 25 கிலோ விதைப் பயறு போதும். துவரைக்கு எக்டருக்கு 10 கிலோ விதை போதும். கலப்புப் பயிராகச் சாகுபடி செய்யத் தனிப்பயிருக்கான விதை அளவில் பாதிபோதுமானது.

பெரும்பாலான பயறு இரகங்கள் சுமார் 70, 75 நாட்களில் இருந்து சுமார் 90 நாட்களுக்குள் அறுவடைக்கு வந்துவிடும். துவரை மற்றும் மொச்சை இரகங்கள் கூடுதல் வயதுடையவை.


## சில முக்கியத் தொழில் நுட்பங்கள் - ஒரு கண்ணோட்டம்:

பயறு வகை இரகத் தொடர்பைத் தொடர்ந்து விதைப் பயறைப் பூஞ்சான நேர்த்தி செய்தலும் ரைசோபியம் நுண்ணுாட்ட நேர்த்தி செய்தலும் மிக முக்கியம். பூஞ்சான நேர்த்தி செய்து 24 மணி நேரத்திற்குப் பிறகுதான் ரைசோபியம் உயிர் உர நேர்த்தி செய்ய

வேண்டும். உயிர் உர நேர்த்தி செய்து சுமார் 15 நிமிடங்கள் நிழலில் உலர்த்தி உடனே விதைப்பு செய்யலாம், அல்லது உயிர் உர நேர்த்தி செய்த 24 மணி நேரத்திற்குள் விதைத்து முடித்துவிட வேண்டும்.

மானாவாரி உளுந்து, பச்சைப் பயறு, தட்டைப் பயறு, துவரை போன்ற பயறு வகைகளுக்கு எக்டருக்கு 12.5 கிலோ தழைச்சத்தும், 25 கிலோ மணிச்சத்தும் அடியுரமாக இடுதல் வேண்டும்.

பயறு வகைகள் பூக்கும்போது பூக்கள் உதிர வாயப்புள்ளது. பூக்கள் உதிர்வதால் மகசூல் பெருமளவு குறைந்துவிடுகின்றது. பூச்சி நோய் அதிகம் தாக்குதல், நுண்ணூட்டச் சத்து பற்றாக்குறை, கடுமையான வெள்ளம் மற்றும் வறட்சி, போதிய வடிகால் வசதியில்லாமை, அதிகமான மேக மூட்டம் தொடர்ந்து நிலைப்பது, அதிகமான ஈரப்பதம், வேகமான காற்று போன்ற காரணங்களால் பயறு வகைகளில் பூக்கள் உதிரும் வாய்ப்புள்ளது.



பூக்கும் பூக்கள் உதிர்வதை Plant Growth Regulator என்று சொல்லப்படும் பயிர் ஊக்கிகளைக் கொண்டு கட்டுப்படுத்தலாம். பயறு சாகுபடிக்கு நாப்தலின் அசிடிக் ஆசிட் (என்.ஏ.ஏ.) என்ற பயிர் ஊக்கி சிபாரிசு செய்யப்படுகிறது துவரைக்குப் பூக்கும் தருணத்திலும், மற்ற பயறு வகைகளுக்குப் பூக்கும்போது ஒரு முறையும், பிறகு 15 நாட்களுக்குப் பிறகு இரண்டாம் முறையும் என்.ஏ.ஏ. தெளிக்க வேண்டும்.

பயறு மகசூலை அதிகரிக்கப் பூக்கள் நன்கு பூத்தால் மட்டும் போதாது. பூத்த பூக்கள் நன்கு காய்க்க வேண்டும். காய் பிடிப்பதற்கு இரண்டு சதம் டி.ஏ.பி. கரைசலை இலை வழியாகத் தெளிக்க வேண்டும் (Foliar Spraying). பூக்கும் நிலையில் ஒருமுறையும், காய்கள் பிடிக்கும் தருணத்தில் ஒருமுறையும் காலை அல்லது மாலை நேரத்தில் தெளிக்க வேண்டும். வெய்யில் நேரத்தில் டி.ஏ.பி. தெளிக்கக் கூடாது.

### உழவர் பெருமக்கள் தனி கவனத்திற்கு:

பயறு வகைகளுக்கு என்.ஏ.ஏ. போன்ற பயிர் ஊக்கிகளைப் பயன்படுத்தும்போதும், டி.ஏ.பி, கரைசலை இலை வழியாகத் தெளிக்கும்போதும், முக்கியமாக விரிவாக்கப் பணியாளர்களின் ஆலோசனையின்படி, அவர்களின் நேரடி கண்காணிப்பில் இத் தொழில் நுட்பங்களைக் கையாள்வது மிகவும் சிறந்தது.

### பயறு சாகுபடித் திட்டங்கள்:

பயறு சாகுபடி பெரிய விவசாயிகளைவிட சிறு மற்றும் குறு விவசாயிகள்தான் அதிகமாகப் பயிர் செய்வதால், பயறு வகை உற்பத்தியைப் பெருக்க மாநில அரசு தனியாகவும், மற்றும் மத்திய அரசின் உதவியுடனும் பயறு உற்பத்தியைப் பெருக்க பல திட்டங்கள் தீட்டப்பட்டு வருடாவருடம் செயல்படுத்தப் படுகின்றன.

### மாநில அரசுத் திட்டம்:

மாநில அரசு பயறு சாகுபடி செய்யும் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறும்

வகையில் வருடந்தோறும் சான்று பெற்ற பயறு விதைகள் ரைசோபியம் நுண்ணூட்டப் பொட்டலங்கள் போன்ற இடுபொருட்களை வேளாண் விரிவாக்க மையங்களின் மூலம் வருடாவருடம் வினியோகம் செய்து வருகிறது.

### தேசிய பயறு பெருக்குத் திட்டம்:

மத்திய அரசு நிதி உதவியுடன் தேசிய பயறு பெருக்குத்திட்டம், நம் மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின் மூலம் உழவர் பெரு மக்களுக்கு மானிய விலையில் பயறு மினிக்கிட்டுகள் வழங்கல், சிறப்பாக பெருவிளக்கப் பண்ணைகள் அமைத்தல், சான்று பெற்ற மற்றும் ஆதார பயறு விதைகள் விநியோகம், ஒருங் கிணைந்த பயிர்பாதுகாப்பு பற்றிய நிருபண வயல்கள் அமைத்தல், உழவர்களுக்குப் பயறு சாகுபடி பற்றிய பயிற்சி வகுப்புகள் நடத்துதல் போன்ற திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

> **"சான்று பெற்ற விவசாய இடு பொருட்கள் வேளாண் விரி வாக்க மையங்களின் மூலம் வருடாவருடம் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றன"**

### வேளாண் கருவிகள்:

பயறு சாகுபடி வயல்களில் நவீன வேளாண் கருவிகளைப் பயன்படுத்தி நிலத்தைப் பண்படுத்தப் பயன்படும் கருவி ஒன்றுக்கு ரூ. 1500/- அதிகபட்ச மானியமாக வழங்கப்படும்.

### தெளிப்பு நீர்ப்பாசனம்:

பயறு சாகுபடி பருவத்தில் குறைந்த பாசனம் தேவைப்படும். குறைவான தண்ணீரைச் சம அளவில் எல்லாப் பகுதிகளுக்கும் நீர்ப் பாசனம் தெளிப்பு நீர்ப் பாசனக் கருவிகள் வழங்கப் படும். ஒரு கருவிக்கு ரூ. 10,000/- வரை மானியமாக வழங்கப்படும். ஆதி திராவிட மற்றும் பழங்குடியினரைச் சார்ந்த விவசாயிகளுக்கும், பண்ணை மகளிர்க்கும் ஒரு கருவிக்கு ரூ. 15,000/- வரை மானியமாக வழங்கப்படும்.

### ரைசோபியம் பொட்டலம்:

பயறு சாகுபடிகளில் அதிக உற்பத்தியைப் பெருக்க நுண்ணுயிர் மிக அவசியம். எனவே ஒரு எக்டருக்கு ரூ. 25/- மானியம் வழங்கப்பட உள்ளது.

### நுண்ணூட்டச் சத்து விநியோகம்:

பயறு சாகுபடி நிலப் பகுதி களில் இரும்புச்சத்து குறைவாகக் காணப்படும். மண் பரிசோதனை பரிந்துரைப்படி தேவையான இரும்புச்சத்து தாதுப் பொருட்கள் வழங்க எக்டருக்கு 100 ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

### பயிற்சி:


வருடத்திற்கு கரீப், ராபி இரு பருவத்திலும் விரிவாக்கப் பணியாளர்களுக்குப் புதிய தொழில் நுட்பம், பயறு சாகுபடிக் குறிப்புகள், புதிய ரகங்கள், அதிக விளைச்சல் பயிர் ரகங்கள் ஆகிய விவரங்களைத் தமிழ்நாடு வேளாண் மைப் பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானிகளால் பயிற்சியளிக்கப்பட உள்ளது.

பயறு உடைக்கும் கருவிகள் மற்றும் சேமிப்புக் கலன்கள் ஆகிய உபகரணங்கள்

50% மானிய உதவியுடன் அதிக பட்சம் கருவி ஒன்றுக்கு 4,000 ரூபாய்க்கு அதிக மில்லாமல் வழங்கப் படும்.

### ஆதி திராவிட உழவர் பெருமக்களுக்கான சிறப்பு நலத் திட்டம்:

இத்திட்டமும் மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பயறு விதைகள், ரைசோபிய நுண்ணூட்டப் பொட்டலங்கள் சிங்க் சல்பேட் நுண்ணூட்டச் சத்து போன்ற இடுபொருட்கள் மானிய விலையில் இந்து ஆதிதிராவிட உழவர் பெருமக்களுக்கு வழங்கப் படுகிறது.



உப்பில்லாப்பண்டம் குப்பையிலே என்பதுபோல், பருப்பில்லாத உணவு பயன் அற்றது தான். பருப்பு உற்பத்திக் குறைவின் காரணமாகவும், மக்கள் பெருக்கத்தின் காரணமாகவும், தற்போது ஒரு கிலோ துவரம் பருப்பு அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய அவல நிலையும் இருக்கிறது. இந்நிலை தொடர்ந்து நீடித்தால், வரும் சந்ததிகளுக்குப் பருப்பு சேர்க்கப்பட்ட உணவு வகைகள் காணக்கிடைக்காத விருந்தாகவும், அதிசயப் பொருளாகவும், கருதப்பட வேண்டிய நிலைமை வந்து விடலாம்; அல்லது பருப்பு வகையே சேர்க்கப் படாத உணவை உண்ணும் நிலைமையும் வராலம்.

இந்த அவல நிலையைப் போக்க, இந்த ஆண்டு முதல், நடப்பு ஆடிப்பட்டத்திலிருந்து சற்று விழிப் புணர்வோடு, முழு ஊக்கத்துடன் பயிர் வகைகள் சாகுபடியில் உழவர் பெருமக்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். பயறு வகை சாகுபடி பரப்பை அதிகரிக்க வேண்டும். தேவையான எல்லாத் தொழில் நுட்பங்களையும் கடைப்பிடித்து, பயறு வகைகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கப் பாடுபட வேண்டும்.

நம் தினசரி பருப்புத் தேவைக்குப் பிற மாநிலங்களை எதிர் நோக்கும் நிலை மாறி, பயறு வகை உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதுடன், ஏற்றுமதி செய்யும் நிலையை எட்ட உற்பத்தித் திறன் மற்றும் உற்பத்தியை அதிகரிப் போம். இந்நிலையை எட்ட, வேளாண்துறை விரிவாக்கப் பணியாளர்கள், உழவர் பெருமக்களுக்கு உறுதுணையாக இருந்து செயல்படுவார்கள்.



### உலகிலேயே அதிக காலம் வாழ்ந்தவர்!

ஜப்பானைச் சேர்ந்த ஷிகேசியோ இஸமி என்பவர் 120 ஆண்டுகள் 237 நாட்கள் வாழ்ந்து உலகிலேயே அதிக காலம் வாழ்ந்தவர் எனும் சாதனையைப் படைத்தார். 1986 ஆம் ஆண்டு நிமோனியா தாக்கியதால் உயிர்நீத்தார்.

# பிச்சைக்காரர்கள் இட்ட பிச்சை!


## சுவைமிகு தகவல் பக்கம்

புகை பிடிப்பது உடல் நலத்திற்குக் கேடு என்று உலகமே புகை பிடிக்கும் பழக்கத்திற்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்க, புகைப்போரும் அதற்கெல்லாம் சளைத்து விடாமல் ஊதித் தள்ளிக்கொண்டே இருக்கிறார்கள். சிகரெட் என்கிற வெண்சுருட்டு நாகரிகத்தின் சின்னமாக இன்று நாடெங்கும் புகைத்துத் தள்ளப்படுகிறது. சிகரெட் கம்பெனிகளும் தங்களது சிகரெட்டைக் குடித்தால் கிட்டாதனவெல்லாம் கிட்டும் என்பது போல மாய விளம்பரங்கள் செய்து வருகின்றன. இந்த சிகரெட் உருவானதே ஒரு சுவையான கதைதான். ஆரம்ப காலத்தில் அமெரிக்காவில் ஒரு பிரிவினர் புகையிலையைச் சுருட்டி சுருட்டாகத்தான் புகைத்து வந்தார்கள். இப்புகைப் பழக்கம் நாளடைவில் அனைத்து இடங்களிலும் பரவியது. ஆனால் இப்படிப்பட்ட சுருட்டுகளைப்பணம் படைத்தவர்களே பயன்படுத்த முடிந்தது. எனவே புகைபிடிக்க விரும்பிய சில பிச்சைக்காரர்கள் கீழே வீசப்படும் எச்சில் சுருட்டுத் துண்டுகளைப் பொறுக்கியெடுத்து, அதனுள்ளிருக்கும் புகையிலைத் தூள்களை ஒரு தாளில் சுருட்டிப் புகைக்க ஆரம்பித்தார்கள். இதைப்பார்த்த பணக்காரச் சீமான்களும், புகையிலைத்தூளை வெள்ளைக் காகிதத்தில் வைத்துச் சுருட்டிப் புகைக்கத் தொடங்கினார்கள். நாளடைவில் அதுவே 'சிகரெட்' என்ற பெயரில் உலகமெங்கும் வியாபாரத்துக்கு வந்துவிட்டது.

எச்சில் துண்டுகளைப் பொறுக்கி தாங்கள் தயாரித்ததை இன்று பணக்காரர்களும், இன்னும் பலப் பலரும் சிகரெட் என்ற பெயரால் தமதாக்கிக் கொண்டதைப்பார்த்து பெருமைப் படுகிறார்கள் பிச்சைக்காரர்கள்.

# மாமரம் காய்காய்க்க அட, இப்படியொரு வழியா!

மரங்களின் பயன், பூத்துக் குலுங்கி காய்த்துக் கனி தருவதுதான். மாமரங்களும் அதற்கு விலக்கல்ல. ஆனால் இடையே சில சமயம் அப்படிக் காய்க்காமல் போய்விடுவதும் உண்டு. அதற்கு அடுத்த ஆண்டும் அம்மரத்தில் காய்ப்புப் பொய்யாகி, அந்தக் கதை தொடரக்கூடாது அல்லவா! இதற்காக உத்தரப்பிரதேச மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் ஒரு வேடிக்கையான வழியைப் பின்பற்றுகிறார்கள். ஒரு குறிப்பிட்ட ஆண்டில் ஏதேனும் மாமரம் காய்ப்பு இல்லாமல் போய் விட்டால், உடனே அந்த மாமரத்தின் சொந்தக்காரர் நான்கைந்து நண்பர்கள் புடை சூழ கையிலே கோடாரியை ஏந்திக் கொண்டு கோபமாக அந்த மரத்தை நோக்கிப் போவார். மரத்தின் அருகே போனதும் ''இந்த மரம் காய்க்கவில்லை; எனவே இதை வெட்டிச் சாய்த்துவிட வேண்டியதுதான்'' என உரத்த குரலில் சொல்வார், அவர் அப்படிச் சத்தம் போட்டு சொல்லிவிட்டுப் போனவுடன், உடன் வந்த நண்பர்கள் அந்த ஆண்டு காய்க்காமல் போனதற்காக அந்த மரத்தைக் கடிந்து கொண்டு, அது வெட்டப்படாமல் உயிரோடு இருக்க வேண்டுமானால், அடுத்த ஆண்டு அதிகமான காய்களை காய்த்துத் தருமாறு அறிவுரை சொல்லி விட்டுப் போவார்கள்.



அந்த மாமரம், தன் உயிருக்குப் பயந்து அடுத்த ஆண்டு பொய்க்காமல் சிறப்பாகக் காய்ப்பதாகச் சொல்கிறார்கள். அந்த ஊர் விவசாயிகள்!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : வெ. இறையன்பு, இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம் , சென்னை - 600 002. தொலைபேசி எண் : 568926, 568927

ஆசிரியர் மடல்

# பள்ளிகளை நேசிக்க வைப்போம்

கல்வி எனும் இனிய பாதையில்
பயணப்படும் போதுதான்
மனிதர்கள்
முழுமையாக மலர்கிறார்கள்.

கல்வி என்பது,
தலையில் கனமேற்றி
தள்ளாடவைப்பதற்காக அல்ல.
அவர்களைத்
'தான்' எனும் எண்ணம்
அற்றவர்களாக ஒரு
பூவைப்போல மென்மையாகவும்
அதே நேரத்தில்,
பாறையைப்போல
திடமானவர்களாகவும்
மாற்றுகின்ற ஓர் இனியவேள்வி,

பள்ளி என்பது ஓர் ஆனந்த மயமான
இடமாக ஆக வேண்டும்.
பள்ளிக்குச் செல்வதைக்
குழந்தைகள் நேசிக்க வேண்டும்

மனப்பாடம் செய்யச் செய்ய
அலசுகின்ற தன்மை
ஆராய்கின்ற மனப்பான்மை
குறைந்து விடுகின்றது.

உடல் உழைப்பு இல்லாத
நடைமுறை வாழ்க்கையால்
மாணவர்களுடைய எலும்புகள்
மூங்கில்கள் போல் திடமாக
இல்லாமல்
முருங்கையைப் போல்
மென்மையாகிவிடுகின்றன.

பள்ளி முடிந்தவுடன்
சிறைச்சாலையிலிருந்து
விடுவிக்கப்பட்டவர்போல்
மகிழ்ச்சியுடன் ஓடிவருவது
அவர்களை இந்தக் கல்வி
எந்த அளவுக்கு சிதைத்திருக்கிறது
என்பதைப் புலப்படுத்துகிறது.

இன்னும் ஒரு சிறகு
தன் எண்ணத்திற்கு முளைக்கும்
என்ற நம்பிக்கையை
மாணவர்க்கு உருவாக்க வேண்டும்.

ஒவ்வொரு மாணவனும்
ஒரு முழு மனிதனாய்
வளர்ச்சியடைய வேண்டும்.

''எதிர்காலப் பள்ளத்தை
யார் துகர்ப்பது என்பதுதான்
நிகழ்காலக் கேள்வி.
வாருங்கள் தோழர்களே!
நாமே வீழ்ந்து
அதை துகர்ப்போம்!
அதனால்
நம் பின்னால்
வருபவர்களாவது
கைதாகாமல்
காப்பாற்றப்படட்டும்!''


தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-23

